விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 24
ஒலி 192 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 14 வியாழக்கிழமை (29.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கு அனுமதி வழங்கியது அமைச்சரவை

(கொழும்பு)
இலங்கையின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான யோசனையை நேற்று நடைபெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பித்ததையடுத்து, இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
இலங்கையின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான விசேட அமைச்சரவை கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்றது.
இதன் போதே, கடன் மறுசீரமைப் 15

### உள்நாட்டுக் கடனை
## மறுசீரமைக்காவிட்டால் மீண்டும் வரிசை யுகம்
### ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)
கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளாவிட்டால் நாடு மீண்டும் வரிசை யுகத்துக்கு செல்லும். அந்த நிலைமையை பாதுகாக்கவே அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. 15

## 2 ஆயிரம் பாடசாலைகள் மூடப்படும் அபாயம்
### இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)
ஆசிரியர் பற்றாக்குறையால் 100க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் மூடப்படும் அபாயம் உள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.
இவ்வாறான 2000க்கும் மேற்பட்ட பாடசாலைகள் உள்ளதாக அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் 15

### தமிழ்க் கட்சிகள்
# ஒன்றிணையாவிட்டால் தீர்வு கிடைக்காது
## ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)
தமிழ்க் கட்சிகள் தனித்தனியாகப் பிரிந்து செல்லாது ஓரணியில் நின்று எம்முடன் இணைந்து பயணிக்காவிட்டால் அரசியல் தீர்வு எனும் விடயம் காலதாமதம் ஆகிவிடும் என்பதுடன் சாத்தியமற்ற ஒரு விடயமாகவும் மாறிவிடும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
(07ஆம் பக்கம் பார்க்க)



### வவுனியாவில்
## எரிந்த நிலையில் சடலம் மீட்பு

(வவுனியா)
வவுனியா, காத்தார்சின்னகுளம் பகுதியில் எரிந்த நிலையில் இளைஞனின் சடலம் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.
குறித்த இளைஞனின் பெற்றோர் நேற்றுக் காலை வெளியில் சென்றுவிட்டு மதியம் வீடு திரும்பியிருந்தனர். 15

### தேர்தல் நடத்தாமல்
## உள்ளூராட்சி சபைகளை நிர்வகிக்கும் சட்டத்திருத்தம்
### வெளியானது வர்த்தமானி

(கொழும்பு)
தற்போதைக்கு கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளை மீண்டும் கூட்டுவதற்கான சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ளது.
1987ம் ஆண்டின் 15ஆம் இலக்க உள் 15

### கொழும்பு துறைமுக நகரில்
## 1.2 பில்லியன் டொலர்களை முதலீடு செய்யவுள்ள சீனா

(பீஜிங்)
சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.
வெளிவிவகார 15



## மின் கட்டணத் திருத்தம் நாளை இறுதித் தீர்மானம்

(கொழும்பு)
இலங்கை மின்சார சபையினால் முன்வைக்கப்பட்ட மின்சார கட்டணத்தை குறைப்பதற்கான் யோசனை தொடர்பில் இறுதித் தீர்மானம் நாளை வெள்ளிக்கிழமை எட்டப்படவுள்ளது.
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள்ஆணைக்குழு, ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் இறுதி கட்டணத்தை அறிவிக்க உள்ளது.
கட்டண திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களைப்பெறுவதற்காக இலங்கை 02

## மாடு விற்பதாகக் கூறி ரூ.10 லட்சம் மோசடி
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)
மாடு வாங்குவதற்காக ஆர்வம் காட்டிய மல்லாவியை சேர்ந்த நபரிடம் வவுனியா ஓமந்தையில் மாடுகள் விற்பதற்கிருப்பதாக தெரிவித்து பணத்தை சுருட்டிக் கொண்டு சிலர் தலைமறைவாகியுள்ளனர்.
மல்லாவியை சேர்ந்த ஒருவருடன் அண்மையில் வவுனியாவை 02

## ரூபாயின் பெறுமதி சற்று வீழ்ச்சி

(கொழும்பு)
இலங்கையில் உள்ள வர்த்தக வங்கி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Hybrid International Hub (pvt) ltd Jaffna**

**கனடா, லண்டன், யப்பான், மலேசியா அவுஸ்ரேலியா, இந்தியா ஆகிய நாடுகளுக்கான விசா விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து தரப்படுவதுடன் விசாக்களும் பெற்றுத் தரப்படும்.**

(C-6835)

**Hybrid International Hub (pvt) ltd Jaffna**

**077 815 5920, 021 222 1265**



**யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

**பழைய மாணவர் சங்கம் - யாழ்ப்பாணம்**

**விசேட பொதுக்கூட்ட அறிவித்தல் - 2023**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின், யாழ்ப்பாணப் பழைய மாணவர் சங்கத்தின் யாப்பு விதிகளுக்கமைய பொதுச் சபை உறுப்பினர்கள் விடுத்த, எழுத்து மூலமான கோரிக்கையின் அடிப்படையில் விசேட பொதுக்கூட்டம் கீழ்வரும் தினத்தில் கூட்டப்படுகின்றது என்பதனை பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அறியத் தருகின்றேன்.

காலம் : 2023.07.09 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00

இடம் : தந்தை செல்வா கலையரங்கம் (யாழ் மத்திய கல்லூரிக்கு அருகாமை)

**விசேட பொதுக்கூட்ட நோக்கம்:**

2023/2024 காலப்பகுதிக்காகத் தெரிவு செய்யப்பட்ட பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகள் முடக்கப்பட்டமை காரணமாக, புதிய நிர்வாகக் குழுவைத் தெரிவு செய்தல்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, விசேட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கியுதவுமாறு பொதுச்சபை உறுப்பினர்களை அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**குறிப்பு :**

**தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறேன்.**

**செயலாளர்**

பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தொடர்புகளுக்கு : 0771293437, 0773812905

(16124)

**"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"**




வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாக பூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில் 10 ஆம் நாள் உற்சவமான நேற்று மாலை திருமஞ்ச உற்சவம் நடைபெற்றது.

அத்துடன் இன்று ஆலய வரலாற்றுடன் தொடர்புடைய கருட/சர்ப்பபூஜை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# உணவு விஷமடைந்ததால் 40 மாணவர்கள் பாதிப்பு

(மகா ஓயா)

மகா ஓயா நில்லம்ப பகுதியில் அமைந்துள்ள பாடசாலையொன்றில் உணவு விஷமடைந்தமையினால் 40 இற்கும் அதிகமான மாணவர்கள் சுகவீனமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மாணவர்கள் தற்போது மகா ஓயா ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் நேற்று காலை உணவை உட்கொண்ட பின்னர் இவ்வாறு சுகவீனமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-7)

# சிகிச்சைக்காக வந்த நோயாளி மீது அசிட் வீச்சு

## ஐவர் காயம்

(பேராதனை)

சிகிச்சைக்காக வந்த நோயாளி ஒருவர் மீது அசிட் வீசியதில் நோயாளி உட்பட ஐவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பேராதனைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற வந்த நோயாளியை இலக்குவைத்தே அசிட் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவனெல்ல பிரதேசத்தில் இருந்து வந்த நோயாளர், அந்த பிரதேசத்தில் உள்ள பெண்ணொருவருடன் தவறான தொடர்பில் இருந்துள்ளார். அந்தப் பெண்ணின் கணவனே இவ்வாறு அசிட் வீசியுள்ளார்.

அசிட் வீச்சு நடத்திய நபரை பேராதனை போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுவட்டார மக்கள் இணைந்து பிடித்து பேராதனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (4-7)


# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 20 . 12 . 1948

மறைவு 30 . 05 . 2023

கடந்த 30.05.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

**அமரர் திருமதி இரத்தினம் ஆறுமுகம்**

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 29.06.2023 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தெணியம்மன் வீதி, திருநாவலூர், புலோலி மேற்கு, பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர் 077 610 3259

(C-6833)


## மின் கட்டண...

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று விசேட அமர்வொன்றை நடத்தியது.

இதன்படி, பொது மக்கள் கருத்துக்கள் மற்றும் இலங்கை மின்சார சபை முன்வைக்கும் சூத்திரங்களை கருத்தில் கொண்டு, இறுதி முடிவை அறிவிக்கும்.

ஜூலை முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணத்தை ஒட்டுமொத்தமாக 3.15 வீதத்தால் குறைக்க இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## மாடு...

சேர்ந்த ஒருவர் அறிமுகமாகியுள்ளார். இதன்போது மாடுகள் வேறு இருந்தால் கூறுங்கள் என மல்லாவியைச் சேர்ந்தவர் அவரிடம் கூறியுள்ளார்.

இந்நிலையில் குறித்த நபர் ஓமந்தையில் மாடுகள் விற்பனைக்கிருப்பதாகவும் உடனடியாக வந்தால் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும் மல்லாவியை சேர்ந்தவர் தற்போது பணம் இல்லை. ஒரு சில நாட்களின் பின்னர் வாங்குவதாக தெரிவித்துள்ளார். இதன்போது வவுனியாவில் வசிப்பவர் தனது அண்ணாவிற்கு பணம் அவசரம் தேவைப்படுவதால் உடனடியாக விற்க வேண்டியுள்ளது பணத்துடன் வாருங்கள் என கூறியுள்ளார்.

இந்நிலையில் நகைகளை அடைவு வைத்து மல்லாவியில் இருந்து ஓமந்தைக்கு வருகை தந்தவரிடம் ஓமந்தை வைத்தியசாலை பகுதியில் வைத்து பத்து இலட்சம் பணத்தை பெற்ற நபர் சற்று தூரம் அழைத்து சென்று மாடுகள் சில வற்றை காட்டியுள்ளார்.

குறித்த மாடுகளுடன் வேறு இருவரும் நின்ற நிலையில் மாடுகளை பொலிஸாருக்கு தெரியாது வேறு பாதையால் கொண்டு வந்து தருவதாக தெரிவித்ததுடன் பணத்தை பெற்றமைக்காக கடிதம் எழுத வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதன்போது ஓமந்தையில் உள்ள கடையொன்றில் பணத்தை பெற்றவர் காகிதாதி ஒன்றை வாங்க சென்ற சமயம் மாடு வாங்க வந்தவரும் சென்றுள்ளார். இதன்போது மாடு கொண்டு செல்லும் போது வீதியை விட்டு வேறு இடத்துக்கு சென்றுவிட்டதாக கூறி மாடு வாங்க வந்தவரை அவ்விடத்திற்கு செல்லுமாறு கூற அவரும் சென்றுள்ளார்.

அங்கு சென்ற மல்லாவியை சேர்ந்த மாடு வாங்க வந்தவர் மாட்டையும் காணாமல் கொண்டு சென்றவர்களையும் காணவில்லை என்பதால் கடிதம் எழுதுவதற்காக காகிதாதி வாங்க சென்றவரிடம் மீண்டும் சென்றுள்ளார். எனினும் அவரும் அங்கு இல்லாத நிலையில் பணத்தை இழந்து செய்வதறியாது நின்றுள்ளார்.

இந் நிலையில் ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோது பத்து இலட்சத்திற்கு மேல் என்பதால் வவுனியாவில் உள்ள குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவர்கள் தாம் முறைப்பாட்டை எடுக்க முடியாது மீண்டும் ஓமந்தையில் முறைப்பாட்டை பதிவு செய்யுங்கள் என திருப்பி அனுப்பிய நிலையில் பணத்தையும் இழந்து முறைப்பாடும் செய்ய முடியாத நிலையில் மாடு வாங்க வந்தவர் செய்வதறியாது நின்றுள்ளார். (4,7,250)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இஸ்ரேல் மீதும் போர்க்குற்றம்

## விசாரணை நடத்துமாறு இஸ்ரேல் மனித உரிமைகள் அமைப்புகள் வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக,இலங்கை அரசாங்கத்துக்கு ஒத்தாசை வழங்கி போர்க்குற்றத்துக்கு உடந்தையாக இருந்தமை தொடர்பில் இஸ்ரேலுக்கு எதிராகவும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.**

இந்த கோரிக்கையை இஸ்ரேலின் மனித உரிமைகள் அமைப்புகளைச் சேர்ந்த யெஸ் ஜிவல் மற்றும் டொரட் செடெக், மனித உரிமைகள் சட்டத்தரணி ஈடேய் மெக் ஆகியோரே முன்வைத்துள்ளதாக அல் ஜசீரா தெரிவித்துள்ளது.

போரின் போது நடந்த போர்க்குற்றங்களை ஐக்கிய நாடுகள் சபையும் மனித உரிமை அமைப்புகளும் ஆவணப்படுத்தியுள்ளன.

போரின்போது, பொதுமக்களுக்கு எதிராக இழைத்த போர்க்குற்றங்களுக்கு உடந்தையாக இருந்த இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச ஆதரவு நாடுகளில் இஸ்ரேலும் ஒன்றென கண்டறியப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டுகளில், இஸ்ரேலின் இராணுவ தொழில்நுட்பத்தை கணிசமான அளவில் கொள்வனவு செய்து, ஆசியாவில் இஸ்ரேலின் மிக முக்கியமான வாடிக்கையாளர்களில் ஒருவராக இலங்கையும் மாறியது.

அத்துடன், போரில் ஈடுபட்ட இலங்கைப் படையினருக்கும் இஸ்ரேல் பயிற்சியும் அளித்துள்ளது. இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட கபிர் விமானங்கள் உள்நாட்டுப் போரில் முக்கிய பங்கு வகித்துள்ளன.

இலங்கையின் உள்நாட்டு போரில் இஸ்ரேலிய ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என குறித்த ஆதாரங்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்தநிலையில், போர்க்குற்றங்களில் இஸ்ரேலின் தொடர்பை வெளிப்படுத்தவும் வழக்குத் தொடரவும் தாம் விரும்புவதாக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இலங்கைக்கு எதிராக போர்க்குற்ற விசாரணைகள் கோரப்படுகின்ற போதிலும் இஸ்ரேல் மற்றும் பிற நாடுகளில் இருந்து அவர்களுக்கு மறைமுகமாக உதவியவர்கள் மீது வழக்குத் தொடரப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

போருக்குப் பின்னர் இஸ்ரேலுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட இலங்கையின் முன்னாள் தலைமை அதிகாரி டொனால்ட் பெரேராவும் போரில் இஸ்ரேல் உதவியதை உறுதிப்படுத்தியுள்ளதாக கடந்த 2010 இல் இஸ்ரேலிய ஊடகமொன்று அளித்த செவ்வியில் அவர் இதனை பதிவிட்டார் என அல் ஜசீரா குறிப்பிட்டுள்ளது. (நி-5)

## கனடாவில் அமைச்சராகும் இலங்கைப் பெண்

(ஒட்டாவா)



கனடாவில் அரச உள்விவகாரங்களுக்கான துணை அமைச்சராக இலங்கை பெண் துஷாரா வில்லியம்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கனேடிய பொதுச் சேவையில் பங்கேற்கும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த முதல் துணை அமைச்சர் வில்லியம்ஸ் என தெரியவருகின்றது.

கொழும்பில் பிறந்த துஷாரா வில்லியம்ஸ், தனது ஆரம்ப மற்றும் இடைநிலை கல்வியை கொழும்பு பெண்கள் கல்லூரியில் கற்றுள்ளார். இதன் பின்னர் 1991 இல் கனடாவுக்கு அவர் குடிபெயர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் உள்ள கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தில் துஷாரா வில்லியம்ஸ் சிறிது காலம் பணியாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## விசேட வர்த்தமானியின் ஊடாக சனிக்கிழமை கூடவுள்ள பாராளுமன்றம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.30 இற்கு பாராளுமன்றத்தை க் கூட்டுவதற்கு அழைப்பாணை விடுத்து அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நேற்று முன்தினம் இந்த அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

பிரதமரின் வேண்டுகோளுக்கு இணங்க, 16 ஆம் பாராளுமன்ற நிலையியல் கட்டளையின் பிரகாரம், இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (நி-5)

## 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு- அண்ணாமலை

(சென்னை)

2009 இல் இந்தியா நடந்து கொண்ட விதத்தை தமிழ் நாட்டின் தமிழர்கள் ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள். இந்தியா தலையிட்டு ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற யுத்தத்தை தடுத்திருக்கலாம் என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

2009 மே மாதம் பத்தாம் திகதி குஜராத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இலங்கையில் எனது சகோதர, சகோதரிகள் படுகொலை செய்யப்படும்போது இந்திய அரசாங்கம் என்ன செய்கின்றது என நரேந்திர மோடி பகிரங்கமாக கேள்வி எழுப்பினார் என அண்ணா



மலை தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர்களிற்கு இந்தியப் பிரதமர் அரசியல் தீர்வொன்றை வழங்குவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2014 இல் பாஜக அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் அணுகுமுறை மாற்றமடைந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர் தமிழ்நாட்டிற்கும் பலாலிக்கும் இடையிலான நேரடி விமான சேவை காரைக்கால் -காங்கேசன்துறை இடையிலான படகு சேவை மற்றும் மன்னார் தமிழ்நாட்டிற்கு இடையிலான படகுசேவைத் திட்டம் போன்றவற்றினால் மக்கள் மத்தியிலான தொடர்பு அதிகரிக்கப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு.

ஈழத்தமிழர்கள், மலையகத் தமிழர்கள் பெருந்துன்பங்களை அனுபவித்துள்ளனர். இரு சமூகத்தினரையும் சர்வதேச சக்திகள் தங்கள் சதுரங்க விளையாட்டிற்காக பயன்படுத்தியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

## விசேட தேவையுடையவர்களுக்கும் இனி சாரதி அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

விசேட தேவையுடையவர்கள் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவது தொடர்பிலான அனுமதியை வழங்குவதற்கு போக்குவரத்து மருத்துவ நிறுவனங்களின் மருத்துவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் காணப்படும் விசேட தேவையுடைய சுமார் 6 இலட்சம் பேரின் உடல் தகுதி குறித்து கடந்த காலங்களில் மருத்துவர்கள் ஒப்புதல் அளிக்காததால், இவர்களின் ஓட்டுநர் உரிமம் பெறுவதில் சிக்கல் நிலை காணப்பட்டது.

இந்நிலையில், மருத்துவர்களின் உடன்படிக்கையுடன் கூடிய, சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைகள் அடங்கிய விசேட அறிக்கையொன்று இம்மாத இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

விசேட தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவினால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, விசேட தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு இருந்த தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டுள்ளதாக குழுவின் தலைவர் அஜித் மானன்னப்பெரும தெரிவித்துள்ளார்.

தற்போதைய சட்டத்தின்படி, எந்தவொரு அரசாங்கப் பதிவு செய்யப்பட்ட மருத்துவரிடமும் உடற்தகுதிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளதுடன், அது தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை போக்குவரத்து ஆணையாளர் ஜனாதிபதிக்கு வழங்குவார் என்றும் அஜித் மானன்னப்பெரும தெரிவித்துள்ளார்.

மேலும், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பில் தற்போதுள்ள சட்டத்தில் எவ்வித மாற்றமும் செய்ய வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ண தகுதிகாண் போட்டிகள் இன்று ஆரம்பம்




இந்தியாவில் நடைபெறவுள்ள 13 ஆவது உலகக் கிண்ண அத்தியாயத்தில் விளையாடவுள்ள கடைசி 2 அணிகளைத் தீர்மானிக்கும் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றின் சுப்பர் 6 சுற்று இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

வரவேற்பு நாடான ஜிம்பாப்வே,முதலிரண்டு உலகக் கிண்ண அத்தியாயங்களில் சம்பியனான மேற்கிந்தியத் தீவுகள், நெதர்லாந்து ஆகியன ஏ குழுவிலிருந்தும் இலங்கை, ஸ்கொட்லாந்து, ஓமான் ஆகியன பி குழுவிலிருந்தும் சுப்பர் 6 சுற்றில் விளையாட தகுதி பெற்றுள்ளன.

இந்த அணிகளுக்கு இடையில் அந்தந்த குழுக்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகள் அந்த வெற்றிப் புள்ளிகளுடனேயே சுப்பர் 6 சுற்றை ஆரம்பிக்கவுள்ளன.

இதற்கு அமைய சுப்பர் 6 சுற்றில் தலா 4 புள்ளிகளுடன் இலங்கையும் ஜிம்பாப்வேயும் விளையாடவுள்ளன. நெதர்லாந்தும் ஸ்கொட்லாந்தும் தலா 2 புள்ளிகளுடன் அடுத்த சுற்றை எதிர்கொள்ளும். ஆனால், மேற்கிந்தியத் தீவுகளும் ஓமான் வெறுங்கையுடன் சுப்பர் 6 சுற்றை ஆரம்பிக்கவுள்ளன.

ஏ குழுவிலிருந்து தகுதி பெற்ற அணிகள் பி குழுவிலிருந்து தகுதி பெற்ற அணிகளை சுப்பர் சுற்றில் எதிர்த்தாடும். சுப்பர் 6 சுற்றில் 9 போட்டிகள் நடைபெறுவதுடன் அந்த சுற்று முடிவில் முதலிரண்டு இடங்களைப் பெறும் அணிகள் உலகக் கிண்ணப் போட்டியில் விளையாட தகுதிபெறும்.இந்த இரண்டு அணிகளும் சுப்பர் 6 சுற்றில் தலா 2 போட்டிகளில் வெற்றி பெற்றால் தலா 8 புள்ளிகளுடன் உலகக் கிண்ணப் போட்டியில் பங்கு பற்றுவதை உறுதி செய்து கொள்ளும்.

இன்று முதல் சுப்பர் 6 சுற்றில் ஜிம்பாப்வே, நெதர்லாந்தை எதிர்கொள்ள உள்ளது.சுப்பர் 6 சுற்றில் நெதர்லாந்தை ஜூன் 30ஆம் திகதியும் ஜிம்பாப்வேயை ஜூலை 2 ஆம் திகதியும் மேற்கிந்தியத் தீவுகளை ஜூலை 7 ஆம் திகதியும் இலங்கை எதிர்த்தாடும். (6)

# ஆறுதல் வெற்றியுடன் வெளியேறிய அயர்லாந்து



ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிராக புலாவாயோ அத்லெட்டிக் கழக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஐ.சி.சி உலகக் கிண்ண தகுதிகான் பி குழு போட்டியில் போல்ஸ்டேர்லிங் குவித்த அபார சதம், அயர்லாந்துக்கு 138 ஓட்ட வெற்றியை ஈட்டிக் கொடுத்தது.

கடைசிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட அயர்லாந்து, முன்வரிசை வீரர்களின் அதிரடிகளின் பலனாக 50 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 349 ஓட்டங்களைக் குவித்தது.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் அயர்லாந்து பெற்ற இரண்டாவது அதிகூடிய மொத்த எண்ணிக்கை இதுவாகும்.

நியூஸிலாந்துக்கு எதிராக டப்ளினில் கடந்த வருடம் 9 விக்கெட்டுகளை இழந்து பெற்ற 359 ஓட்டங்களே அயர்லாந்தின் அதிகூடிய மொத்த எண்ணிக்கையாகும்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு இராச்சியம் 39 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் மொஹமத் வசீம் (45), சஞ்சித் ஷர்மா (44), பாசில் ஹமீத் (39) ஆகிய மூவரே 35 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றனர். (6)

# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மொயின் அலிக்கு பதிலாக ஜோஷ்டங்





ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் விளையாடுவதற்காக கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்து சென்றுள்ளது.

இரு அணிகள் இடையே பர்மிங்காமில் நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் 2 ஆவது ஆஷஸ் டெஸ்ட் போட்டிக்கான 11 பேர் கொண்ட இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டது.

அந்த அணியில் ஒரே ஒரு மாற்றமாக முதல் டெஸ்டில் காயமடைந்த மொயின் அலிக்கு பதிலாக ஜோஷ் டங் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் வலது கை வேகப்பந்து வீச்சாளர் ஆவர். (6)

# 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி சாதனை படைத்த

## நாதன் லயன்



அவுஸ்திரேலிய அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ளது. முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில் 2 ஆவது டெஸ்ட் போட்டி நேற்று ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் விளையாடுவதன் மூலம் தொடர்ந்து 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய ஒரே பந்து வீச்சாளர் என்ற சாதனையை அவுஸ்திரேலியாவின் நாதன் லயன் படைத்துள்ளார். தொடர்ந்து 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி சாதனை படைத்தவர்கள் பட்டியலில் 5 பேட்ஸ்மேன்கள் மட்டுமே இடம் பிடித்த நிலையில் 6 ஆவது வீரராக நாதன் லயன் பந்து வீச்சாளராக இந்த பட்டியலில் இடம் பிடித்துள்ளார். இந்த பட்டியலில் ஒரே ஒரு இந்திய வீரராக சுனில் கவாஸ்கர் 4 ஆவது இடத்தில் உள்ளார். தொடர்ந்து 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய வீரர்களாக 159 - அலஸ்டர் குக் ,153 - ஆலன் பார்டர் ,107 - மார்க் வாக் ,106 - சுனில் கவாஸ்கர் ,101 - பிரண்டன் மெக்கல்லம் ,100* - நாதன் லயன் ஆகியோர் உள்ளனர். (6)

# இலங்கை அணி 82 ஓட்டங்களால் வெற்றி



2023 உலகக் கிண்ண தகுதிகாண் கிரிக்கெட் தொடரின் ஸ்கொட்லாந்திற்கு எதிரான போட்டியில் இலங்கை அணி 82 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தத் தொடரின் 19 ஆவது போட்டி நேற்று புலவாயோவில் இடம்பெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கொட்லாந்து அணி, இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய இலங்கை அணி, 49.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணிசார்பாக [illegible] நிசங்க 75 ஓட்டங்களையும் சரித் அசலங்க 63 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் ஸ்கொட்லாந்து அணி சார்பாக கிறிஸ் க்ரீவ்ஸ் 4 விக்கெட்டுகளையும் மார்க் வட் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து 246 என்ற வெற்றி இலக்கினை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணியின் முன்வரிசை வீரர்கள் பெரிதும் பிரகாசிக்காததால் அவ்வணி 29 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 163 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

போட்டியின் சிறப்பாட்டக்காரரான மகேஷ் தீக்ஷன 3 விக்கெட்டுகளையும் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை ஈ அச்சுறுத்தலுக்கு கிடைத்தது தீர்வு

## 'என்கார்சியா குவாடலூபே' என்ற ஒட்டுண்ணியை அறிமுகப்படுத்தியது விவசாய திணைக்களம்

**(கொழும்பு) நாடளாவிய ரீதியில் தென்னை பயிர்ச்செய்கைக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள வெள்ளை ஈயினால் ஏற்படும் பாதிப்புக்களை தடுப்பதற்கு உயிரியல் தீர்வாக என்கார்சியா குவாடலூபே என்ற ஒட்டுண்ணியை விவசாயத் திணைக்களம் அறிமுகப் படுத்தியுள்ளது.**

2019 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தென்னை பயிர்ச் செய்கைக்கும் அதன் பின்னர் பழங்கள் மற்றும் மரக்கறி பயிர்ச் செய்கைக்கும் வெள்ளை ஈ யால் ஏற்பட்ட சேதம் பாரதூரமானது என விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெள்ளை ஈக்களைக் கட்டுப் படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய ஒட்டுண் ணியை, விவசாயத் திணைக களத்தின் பூச்சியியல் நிபுணர் பிரபாத் நிஷாந்த அடையாளம் கண்டுள்ளார்.

இந்த ஒட்டுண்ணியை விவ சாயத் திணைக்களத்தின் ஆய் வகங்களில் பெருக்கி விவசா யிகளுக்கு இலவசமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரபாத் நிஷாந்த தெரிவித் தார்.

இந்த ஒட்டுண்ணி தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின் கார ணமாக தென்னந்தோப்புக ளில் வெள்ளை ஈக்களின் எண்ணிக்கை 95 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறை ந்துள்ளதாகவும் தெரியவந்துள் ளது. (நி-5)

# விசேட மருத்துவர்களின் ஓய்வு பெறும் காலம் நீடிப்பு

(கொழும்பு)

அரச சேவையில் உள்ள விசேட மருத்துவர்களின் சேவை காலத்தை 63 வயது வரை நீடிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள் ளதாக சட்டமா அதிபர் நேற்று முன்தினம் மேன்முறை யீட்டு நீதிமன்றத்திற்கு அறி வித்துள்ளார்.

விசேட மருத்துவர்களின் ஓய்வு பெறும் வயதை 60 ஆக குறைக்கும் அமைச் சரவை தீர்மானத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் விசாரணை க்கு எடுத்துக் கொள்ளப் பட்ட போதே இந்த தீர்மா னம் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

176 மருத்துவர்களால் தாக் கல் செய்யப்பட்ட மனு மேன் முறையீட்டு நீதிமன் றத்தின் தலைவர் நீதியரசர் நிஷ்ஷங்க பந்துல கருணா ரத்ன மற்றும் நீதியரசர் எம்.ஏ.ஆர். மரிக்கார் முன் னிலையில் விசாரணை க்கு எடுத்துக்கொள்ளப்பட் டது.

விசாரணையின் போது. விசேட மருத்துவர்களின் ஓய்வு பெறும் வயதை 63 ஆக அதிகரிக்க சுகாதார அதிகாரிகள் தீர்மானித்து ள்ளதாக சுகாதார அமைச் சின் செயலாளரிடமிருந்து தனக்கு அறிவுறுத்தல் கிடை த்துள்ளதாக சட்டமா அதி பர் சார்பில் முன்னிலை யான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே நீதிமன்றத்தில் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அமைச்ச ரவை தீர்மானம் எடுக்கும் என வும் அவர் குறிப்பிட்டுள் ளார். (நி-5)

# தொட்டிலில் கழுத்து இறுகி பலியான 9 வயதுக் குழந்தை

(கொழும்பு)

நாவலப்பிட்டி - மொன்றிகிறி ஸ்ரோ பெருந்தோட்ட பகுதியில் தொட்டிலில் கழுத்து இறுகி குழந்தை ஒன்று உயிரிழந் துள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் மதியம் இடம்பெற்றுள் ளதாக பொலிஸார் தெரிவிக்கி ன்றனர்.

சாரியொன்றில் கட்டப்பட்டி ருந்த தொட்டிலில் 9 வயது குழ ந்தை ஒன்றே கழுத்து இறுகி இவ்வாறு உயிரிழந்துள்ளது.

வீட்டிலிருந்த மற்றுமொரு சிறு குழந்தைக்காக கட்டப்பட்டிருந்த தொட்டிலில் விளையாடிக் கொண் டிருந்த சந்தர்ப்பத்திலேயே, இந்த சம்பவம்நேர்ந்துள்ளமை பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (நி)

# அறுபது கோடி ரூபா நட்டத்தில் இயங்கும் லங்கா சதொச

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனத் திற்கு 2022ஆம் ஆண்டில் மாத்திரம் அறுபது கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக கோப் குழு தெரிவித்துள்ளது.

லங்கா சதொச நிறுவனத் தின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக கோப் குழு தலைவரின் தலைமையில் பாரா ளுமன்ற வளாகத்தில் இடம் பெற்ற விசேட கலந்துரையாட லின் போதே இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் மனித பாவனை க்காக கொண்டு வரப்பட்டு கால் நடை தீவனத்திற்காக விற்பனை செய்யப்பட்ட அரிசியின் கையிரு ப்பு காலாவதியானதால் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (நி)

## தேர்தல் ஒத்திவைப்பு விவகாரம்

# நீதிமன்றில் முன்னிலையாகுமாறு தேர்தல் ஆணைக்குழுவிற்கு உத்தரவு

(கொழும்பு)

நீதி மன்றில் முன்னிலை யாகுமாறு இலங்கையின் தேர்தல் ஆணைக்குழு விற்கு உச்ச நீதிமன்றி னால் உத்தரவு பிறப்பி க்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தை தாம தப்படுத்தியமை தொடர்பில் ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழு விசாரணை செய்து வருகின்றது.

குறித்த நீதிபதிகள் குழு வினாலே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பணம் இல்லை எனக் கூறி தேர்தலை ஒத்தி வைத்து வந்த அரசாங் கத்தின் நாடகம் நீதிமன்றில் அம்பலமாகி வருவதாக பிரபலசட்டத் தரணி சுனில் வட்டலை தெரிவித்துள்ளார்.

மேலும் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு உடந்தையாக செயற்பட்ட அரசாங்க அதி காரிகளும் தண்டனை அனு பவிக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# இராசிபலன்

29.06.2023
ஆனி 14, வியாழக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 11.30 மணிவரை
சுவாதி பிற்பகல் 1.45 மணிவரை

சுபநேரம் -7.26-8.56 மணிவரை
இராகுகாலம்-1.26-2.56 மணிவரை
சயன ஏகாதசி விரதம்,
அமிர்தசித்தம், ஹஜ்ஜுப் பெருநாள்

சந்திராஷ்டமம்- உத்திரட்டாதி, ரேவதி

வளவன்

**மேஷம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், விருந்தினர்களின் வருகை இடம் பெறலாம்.

**ரிஷபம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், உடல்நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டு வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** தொலைதூரத்தில் இருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** மனை சம்மந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, எண்ணிய காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**கன்னி** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், வாக்கு மேன்மையடையும்.

**துலாம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செலவிற்கேற்ப வருமானம் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அலைச்சல்கள் சற்றுக் கூடும் நாள்.

**தனுசு** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலை மோதும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், பெண்களால் பெருமை வந்து சேரும்.

**கும்பம்** பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மீனம்** குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலைகள் ஏற்படலாம், கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவுள்ள மனத்தின் அறிகுறி உழைக்கும் கரங்களே.

# கொடுப்பனவுத் தெரிவில் முறைகேடு எதிர்ப்புத் தெரிவித்து
# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்ட மக்கள்

(முல்லைத்தீவு)

**அரசின் அஸ்வெகம கொடுப்பனவில் பெயர் நீக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கேப்பாபிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாகக் கூடி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**





முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கு உட்பட்ட கேப்பாபிலவு மக்கள் அரசின் அஸ்வெசும கொடுப்பனவில் இருந்து அவர்கள் பெயர் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் வாசலை மறித்து குறித்த எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

இதன்போது மாவட்டச் செயலக நுழைவாயிலில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

அரசின் உதவித்திட்டம் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற கருத்தினையும் மக்களின் சொந்தக் காணிகள் இது வரை விடுவிக்கப்படாத நிலையில் அரசின் இந்த உதவித் திட்டமும் கிடைக்கவில்லை என மக்கள் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் தங்கள் ஆதங்கத்தினை மக்கள் வெளிப்படுத்தினர்.

மாவட்டச் செயலக வாசலை மறித்த மக்களுடன் முல்லைத் தீவு மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்துரையாடிய பின்னர் சிலரை மாவட்டச் செயலக மண்டபத்திற்கு அழைத்துச் சென்று மக்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இதனடிப்படையில் மக்களை முறையீடுகளை மேற்கொள்ளுமாறும் தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் மேலதிக அரசாங்க அதிபர் அளித்த உறுதிமொழியின் அடிப்படையில் போராட்டத்தை கைவிட்டு மக்கள் கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## அடகு வைத்த நகைகளில் ஒரு தொகுதி
### பாதிக்கப்பட்ட வாடிக்கையாளரிடம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் திருநெல்வேலி சேவை நிலையத்தில் அடகு வைக்கப்பட்ட நகைகளை அங்கு பணியாற்றிய ஒருவர் கையாடிச் சென்றதன் காரணமாகத் தமது நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருந்த வாடிக்கையாளர்களில் 20 பேருக்கு அவர்களது நகைகள் உயர் நீதிமன்றப் பதிவாளர் உட்பட நீதிமன்ற அதிகாரிகள் முன்னிலையில் மீள வழங்கப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்களில் ஒரு தொகுதியினருக்கு நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக நகைகளை மீளளிக்கும் நிகழ்வு நேற்று மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் கே.கோடீஸ்வரன் தலைமையில் திருநெல்வேலிக் கிளையில் நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களில் 20 பேருக்கு முதற்கட்டமாக நகைகள் மீளளிக்கப்படுவதாகவும் மீதமுள்ளவர்களுக்கு அடுத்து வரும் வாரங்களில் படிப்படியாக நகைகள் மீளளிக்கப்படவுள் என என்றும் வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில், மக்கள் வங்கியின் கிளை வலையமைப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம்.டபிள்யூ. சூரியகுமார, பிராந்திய சட்ட அதிகாரி திருமதி எஸ்.சுகாஸ், பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர், திருநெல்வேலி கிளை முகாமையாளர், உயர்நீதிமன்றப் பதிவாளர் உட்பட நீதிமன்ற அதிகாரிகள் மற்றும் பாதிக் கப்பட்ட வாடிக்கையாளர்களும் கலந்து கொண்டனர். (நி-5-6-33)

## கையடக்கத் தொலைபேசியை திருடியவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகில் தொலைபேசி திருத்தகம் ஒன்றில், கையடக்கத் தொலைபேசியை திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருத்தகத்திற்கு கடந்த திங்கட்கிழமை வந்த இளைஞன் அங்கிருந்த கையடக்கத்தொலைபேசி ஒன்றினை திருடிச் சென்றுள்ள சம்பவம் தொடர்பான காணொளி அக்கடையில் பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு கமராவில் அவதானிக்கப்பட்டது. குறித்த காணொளிப் பதிவினை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து. விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வீடியோ பதிவு ஊடாக குறித்த இளைஞனை அடையாளம் கண்டு கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இளைஞனிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6-33)

## இலவச கண்புரை சத்திரசிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான கண்புரைசத்திர சிகிச்சையினை யாழ்.போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவன் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் கரவெட்டி பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரைசத்திர சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இறுதிக்கட்ட இலவச கண் பரிசோதனைமுகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் உடுப்பிட்டி கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதேபோன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இறுதிக் கட்ட இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலும் நடைபெறவுள்ளன.


குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத் தரப்படும்.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளாகள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (நி-5-6)


அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்
இசை வேள்வி -2023
முதலாம் நாள் நிகழ்வுகள்
காலம் - 29.06.2023 வியாழன்
நேரம் - மாலை 5.00 மணி
இடம் - நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம்
திருநாள் மங்கலம்
மங்கல விளக்கேற்றல்
பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை
(யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்.)
கடவுள் வாழ்த்து
செல்வி.தரங்கினி பாலமுருகன்
தலைமையுரை
ஜெ.விஸ்வநாதன்
(பெருந்தலைவர்,கொழும்புக் கம்பன் கழகம்.)




இசையரங்கு
பாட்டு - க. வர்ஜிகன்
வயலின் - இ. நிரோஜன்
மிருதங்கம் - க.கஜன்
கடம் - கு. ரவிசங்கர்
கஞ்சிரா - பிரம்மஸ்ரீ. நா.சிவசுந்தர சர்மா



இசைப் பேரரங்கு
பாட்டு - அபிஷேக் ரகுராம்
வயலின் - வி.எஸ்.கோகுல்
மிருதங்கம் - டெல்லி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு காண்பதற்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

## விமர்சனங்கள் தீர்வுக்கான காலத்தை தாமதமாக்கும்– ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

"அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிக்கவும் அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டும். முக்கியமாக, தமிழ்க் கட்சிகள் தனித்தனியாகப் பிரிந்து நிற்காமல் எம்முடன் ஒன்றிணைந்து பயணிக்க முன்வர வேண்டும்."- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



"அரசியல் தீர்வு குறித்தோ, நாட்டின் அபிவிருத்தி குறித்தோ கட்சிகள், விமர்சனங்களை முன்வைக்க வேண்டாம். அவை காலத்தைத் தாமதிக்குமே தவிர வேறு பயனில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வெளிநாட்டுப் (பிரிட்டன், பிரான்ஸ்) பயணத்தின் போது சர்வதேச தலைவர்களையும் புலம்பெயர் மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

இதன்போது, தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல், எதிர்கால இலங்கையை வடிவமைத்தல் போன்ற விடயங்கள் குறித்து எனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினேன்.

அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியாக வேண்டும். முக்கியமாக தமிழ்க் கட்சிகள் தனித்தனியாக நிற்காமல் ஒன்றிணைந்து எம்முடன் பயணிக்க வேண்டும்.

இந்த விடயங்களில் அரசியல் கட்சிகள் விமர்சனங்களை முன்வைக்க வேண்டாம். இதனால், அரசியல் தீர்வு முயற்சியும் நாட்டின் அபிவிருத்தியுமே காலதாமதமாகும்." என அவர் தெரிவித்தார். (நி-5)

# மின் கட்டணக் குறைப்பு; இறுதித் தீர்மானம் நாளை

(கொழும்பு)

மின் கட்டணத்தை குறைப்பது தொடர்பில் மின்சார சபையினால் யோசனை ஒன்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான இறுதித் தீர்மானம் நாளை வெள்ளிக்கிழமை எடுக்கப்படவுள்ளதாக இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. குறித்த யோசனைகள் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களும் கேட்டறியப் பட்டதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மின்கட்டண திருத்தப் பட்டியல் இலங்கை மின்சார சபையினால் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் அண்மையில் கையளிக்கப்பட்டிருந்தது.

இதன்படி எதிர்வரும் முதலாம் திகதி முதல் மின் கட்டணத்தைக் குறைக்க மின்சார சபை யோசனை முன்வைத்துள்ளது.

இதற்கமைய வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் 30 அலகுகள் வரையிலான மின் கட்டணத்தை 23 வீதமாகவும் உணவகங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணத்தை 29 முதல் 40 வீதமாகவும் குறைப்பதற்கு இலங்கை மின்சார சபை திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கொழும்பு- யாழ் புகையிரத சேவைகள் அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவையை அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் கடவை பராமரிப்பு பணிகளுக்காக கொழும்பு - யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவை கடந்த ஜனவரி மாதம் 5 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டது.

வடக்கு புகையிரத மார்க்கத்தின் அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற திருத்தப் பணிகள் காரணமாக கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையான நேரடிப் புகையிரத சேவைகள் அநுராதபுரம் புகையிரத நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், இந்தியாவின் நிதி உதவியுடன் வடக்கு புகையிரத மார்க்க திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், எதிர்வரும் 15 ஆம் திகதி வடக்கு புகையிரதச் சேவையை மீள ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், ஆசனப் பதிவுகள் உள்ளிட்ட மேலதிக விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களின் பின்னர் இறுதித் தீர்மானம் எட்டப்படும் என புகையிரதத் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் சமன் பொல்வத்தகே தெரிவித்துள்ளார். (நி)

## தேசிய கடன் மறுசீரமைப்பு ஊடாக

# வங்கிக் கடன்களை குறைப்பு செய்தால் அரச வங்கிகளை விற்கும் அபாயம் ஏற்படும்

## ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

தேசிய கடன் மறுசீரமைப்பு ஊடாக வங்கிக் கடன்களை குறைப்புச் செய்தால், அரச வங்கிகளை விற்கும் அபாயம் ஏற்படும் என தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார சபை உறுப்பினரான ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக முகாமைத்துவப் பீட பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 5 நாட்கள் விடுமுறை வழங்கி தேசிய கடனை குறைக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் உறுதிப்படுத்தியுள்ளார். இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் அரசாங்கம் பொறுப்புக்கூறலைப் புறக்கணித்து நிதிச் சந்தை கட்டமைப்பில் அவநம்பிக்கையை ஏற்படுத்தி வருகின்றது.

இது தொடர்பான திட்டங்கள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர். இவ்வாறான நிலைமையில் இந்த இரண்டு அல்லது மூன்று நாட்களில் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டம் பேரழிவை ஏற்படுத்தும்.

அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் விபரீதமான சூழ்நிலைகள் ஏற்படும் அபாயம் காணப்பட்டாலும் பொதுமக்கள் தமது வைப்புத் தொகையை இழக்க நேரிடும் என்ற தேவையற்ற அச்சத்தில் செயற்பட வேண்டாம் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அரசாங்கம் இந்தத் தருணத்தில் பொது மக்களிடம் இருந்து இப்படி ஒரு தேவையற்ற அச்சம் ஏற்படுவதை எதிர்பார்க்கின்றதா என்று தெரியவில்லை. அவர்களிடம் இருந்து பதில் இல்லாததால் குழப்பங்களை உருவாக்கி, ஸ்திரமின்மை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அத்துடன் தேசிய கடன் மறுசீரமைப்பு ஊடாக வங்கிக் கடன்களை குறைப்பு செய்தால் அரச வங்கிகளை விற்கும் அபாயம் ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 250 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 700 | 750 | 600 | 800 |
| தக்காளி | 250 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 250 | 280 |
| கோவா | 300 | 300 | 300 | 300 |
| கரட் | 360 | 500 | 450 | 600 |
| பூசணி | 100 | 100 | 100 | 120 |
| புடோல் | 180 | 240 | 200 | 250 |
| வாழைக்காய் | 100 | 180 | 140 | 160 |
| சின்ன வெங்காயம் | 380 | 360 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 350 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 180 | 250 |
| பயற்றங்காய் | 600 | 700 | 500 | 400 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 450 | 400 | 350 | 400 |
| கறிமிளகாய் | 400 | 350 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 550 | 700 | 600 | 800 |
| போஞ்சி | 530 | 550 | 550 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 160 | 200 |
| கீரை – 1 பிடி | 80 | 70 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 80 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 420 | 500 | 400 | --- |
| முள்ளங்கி | 160 | 180 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 180 | 50 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | 200 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 154

### ஒழிந்திருக்கும் திறமையை கண்டுபிடித்தால் யாரும் கனவான் ஆகலாம்

ஒரு புகைவண்டி நிலையத்தில் யாசகன் ஒருவன் தனது கைப்பை நிறைய பென்சில்களை வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தான். ஒரு கனவான் அந்த வழியாகச் சென்றபோது 5 ரூபாய் நாணயத்தை யாசகனின் திருவோட்டில் போட்டார். பிறகு புகைவண்டியில் ஏறி அமர்ந்தார்.

அவரது மனதில் ஒரு கருத்து உதித்தது. எழுந்து வேகவேகமாக அதே யாசகனிடம் சென்று, "அவனது பையிலிருந்த பென்சில்களை எடுத்துக்கொண்டு 5 ரூபாய்க்குச் சமமான பென்சில்களை எடுத்துக்கொள்கிறேன். என்ன இருந்தாலும் நீயும் தொழில் செய்கிறாய் அல்லவா?", என்று கூறிவிட்டு புகைவண்டியில் தனது இருக்கைக்குத் திரும்பினார்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு அந்த கனவான் ஒரு விருந்தில் கலந்துகொள்ளச் சென்றார். அந்த விருந்தில் 6 மாதங்களுக்கு முன்னாலே ரயில் நிலையத்தில் யாசகம் பெற்றுக்கொண்டு இருந்தவனும் அமர்க்களமான கோட் மற்றும் டை சகிதமான உடையில் கனகச்சிதமான கனவானாக விருந்தில் பங்குகொள்ள வந்து இருந்தான். அவன் இந்தக் கனவானை அடையாளம் கண்டுகொண்டு இப்படிக்கூறினான்.

"அன்பரே... நீங்கள் என்னை மறந்து போகியிருக்கலாம். ஆனால் நான் உங்களால்தான் இப்படி நல்ல நிலைமைக்கு வந்து இருக்கிறேன். நான் நல்ல நிலைமைக்கு வருவதற்கு நீங்கதான் காரணம்." அந்த கோட் சூட் வாலிபன் கனவானிடம் பழைய நிகழ்வுகளை நினைவூட்டினான்.

கனவான், "எனக்கு நினைவுவந்துவிட்டது. இப்போது என்ன செய்கிறாய். உடைகளிலும் நல்ல மாற்றம் தென்படுகிறது. என்னப்பா?" என்று கேட்டார்

கோட் சூட் வாலிபன் சொன்னான். "நீங்கள்தான் என்னுடைய மாற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் காரணம். என்னுடைய வாழ்நாளிலே உங்களை மறக்கமுடியாது. என் வாழ்க்கையில் என்னை ஒரு மனிதனாக மதித்த முதல் மனிதர் நீங்கள்தான். 5 ரூபாயை எனது திருவோட்டில் இட்டபின் சிறிது நேரத்திற்குப் பிறகு வந்து அந்த ரூபாய்க்குச் சமமான பென்சில்களை என்னிடமிருந்து பெற்றுச் சென்றீர்கள்".

"எனக்குள் ஒழிந்திருந்த வியாபாரி அப்போதுதான் எனக்கே தெரிய வந்தான். அதுவரையில் யாசகமெடுத்துத் திரிந்த நான் அந்த ஒரு நிமிடத்தின் தாக்குதலில் ஒரு வியாபாரியாக உருவெடுத்து உழைக்க ஆரம்பித்தேன்".

"அந்த ஒரு நிமிடத்துக்கு முன்னர் வரையில் சோம்பேறியாக அழுக்காக புகைவண்டி நிலையத்தின் யாசகர்களின் வரிசையில் ஒருவனாக யாராலும் மதிக்கப்படாத, உருப்படாதவனாக இருந்த நான் உங்கள் நடவடிக்கையால் திருந்தினேன்.

என்னுள்ளே சாக்ரடீஸின் கொள்கைகளைத் தூண்டி விட்டவர் நீங்கள்தான். பிறகுதான் சிந்திக்க ஆரம்பித்தேன். "நான் யார்? எனது கொள்கை என்ன? எதற்காகவோ பிறந்துவிட்டேன். ஆனால் சாகும்போதாவது எதையாவது சாதித்துவிட்டு சாகலாமே. என முடிவெடுத்தேன். யாசகம் பெறுவதை நிறுத்தி எனது புதிய வாழ்க்கையை ஆரம்பித்தேன். நான் உங்களுக்கு நன்றி கூறுவதற்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். நன்றிகள் பலகோடி ஐயா", என்றான்.

அனைவருக்குள்ளும் ஏதாவது ஒரு திறமை ஒழிந்திருக்கும். அதை சரியான நேரத்தில் பயன்படுத்தினால் வாழ்கையில் முன்னேறலாம்!

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## தவறான தகவல்களைப் பகிர்ந்தால் ஆண்டு வருமானத்தில் 5% அபராதம்

### அவுஸ்திரேலிய அரசு அதிரடி

(கன்பெரா)



சமூக வலைத் தளங்களில் தவறான தகவல்களைப் பகிர்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென அவுஸ்திரேலிய அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் "அவுஸ்திரேலியாவில் சமூக வலைத் தளங்களில் தவறான தகவல்கள் பரப்புவதை நிறுத்தாவிட்டால் அதன் உரிமையாளர்களுக்கு ஆண்டு வருமானத்தில் ஐந்து சதவீதம் அபராதமாக விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சமூக வலைத் தளங்களில் தவறான தகவல்கள் பரப்பப்படுவதை தவிர்க்க முடியும் என அந்நாட்டு அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

டிஜிட்டல் தளங்களை ஒழுங்குபடுத்தும் முயற்சியில் அவுஸ்திரேலிய அரசு முன்னணியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## மங்கோலிய...

## இதுவரை 1...

## உ...

(மங்கோலியா)

மங்கோலியாவி...
நிலையில் பாதிக்க...
நேரத்திற்குள் மர...
எச்சரிக்கை விடுத்...

அந்த வகையில், இந்த வைரஸ், கொறித்து உண்ணும் விலங்குகளிடம் காணப்படுவதால் அந்த நாட்டில் அணில் வகையைச் சேர்ந்த மர்மோஸ் என்ற விலங்குகளை வேட்டை

## ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதலால் சிறுமி உட்பட நால்வர் உயிரிழப்பு

(கீவ்)

உக்ரைனின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள கிரமடோர்ஸ்க் நகரில் ரஷ்யப் படையினரின் ஏவுகணைத் தாக்குதலில் சுமார் நால்வர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உணவு விடுதியொன்றும் வணிகப் பகுதியொன்றும் நேற்று முன்தினம் இரவு தாக்கப்பட்டன.

இந்நகரம் உக்ரைனின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனினும், ரஷ்யப் படையினர் ஆக்



கிரமித்துள்ள உக்ரைனிய பகுதிகளுக்கு அருகில் இந்நகரம் உள்ளது.

உயிரிழந்தவர்களில் 17 வயதுச் சிறுமியும் அடங்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5)

## பாகிஸ்தானில் தொடரும் ச... இருபதை தாண்டிய உய...

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் தொடரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவு போன்ற அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆக அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த நாட்டின் பஞ்சாப் மாகாணம் மற்றும் ஷேக்புரா, நரோவல் ஆகிய மாவட்டங்களிலும் கனமழை நீடித்து வருவதால் இயற்கை அனர்த்தங்களில் நரோவல் மாவட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# …யாவில் வேகமாக பரவிவரும் பிளேக் நோய்

## … 17 மாகாணங்களில் பரவியுள்ளதாக அறிவிப்பு

## …லக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

…ா)

**…வில், புபோனிக் பிளேக் நோய் வேகமாகப் பரவி வரும் …க்கப்பட்டவருக்கு உரிய சிகிச்சை அளிக்காவிடில் 24 மணி …மரணம் சம்பவிக்கலாம் என உலக சுகாதார அமைப்பு …த்துள்ளது.**

யாடுவது குற்றம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிவிக்கப்பட்ட போதிலும் பலர் அவற்றை சட்டவிரோதமாக வேட்டையாடி உட்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான சூழலில், அந்நாட்டில் பிளேக் நோய் அறிகுறியுடன் பலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அந்த அடிப்படையில், அங்குள்ள 17 மாகாணங்கள் பிளேக் நோய் அபாயத்தில் உள்ளதாக நோய்களுக்கான தேசிய மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், பிளேக் நோயால் அதிகம் பாதிக்கப்பட்ட கோவி அல்டாய் என்ற மாகாணத்தை தனிமைப்படுத்த அந்த நாட்டின் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5)




## தீபாவளி தினத்தன்று நியூயோர்க்கில் பொதுவிடுமுறை அறிவிப்பு

(நியூயோர்க்)

இந்துக்களால் மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்படும் பண்டிகையான தீபாவளி அன்று நியூயோர்க்கில் பொதுவிடுமுறை அளிக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.


தீபாவளிப் பண்டிகைக்கு விடுமுறை நாள் அறிவிக்கப்பட வேண்டுமென்பது அமெரிக்க வாழ் இந்துக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வந்த நிலையிலேயே இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்நிலையில் இந்துக்கள் அதிகளவில் வாழும் நியூயோர்க்கில் தீபாவளி பண்டிகையன்று பொது விடுமுறை அளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நியூயோர்க் நகர மேயர் எரிக் ஆடம்ஸ், கருத்துத் தெரிவிக்கையில் தீபாவளியை நியூயோர்க் நகரம் பொதுவிடுமுறை யாக மாற்றும் மசோதாவை மாநில சட்டமன்றமும் மாநில செனட்டும் நிறைவேற்றியதில் பெருமிதம் கொள்கிறேன்.

இந்த மசோதாவில் ஆளுநர் கையெழுத்திடப் போகிறார் என்று நாங்கள் நம்புகிறோம். இது தீபாவளியைக் கொண்டாடும் அனைத்து சமூகத்தினரதும் வெற்றியாகும் எனத் தெரிவித்துள்ளார். (நி-5)

## இயந்திர கரங்களை உருவாக்கும் விஞ்ஞானிகள்



(டோக்கியோ)

ஒரே நேரத்தில் பல வேலைகளை விரைவாக செய்து முடிக்கும் வகையில் இயந்திர கரங்களை உருவாக்கும் புதிய நடவடிக்கையில் ஜப்பானிய விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர்.

ஜிசாய் என்ற ஜப்பானியக் கலையிலிருந்தே இந்த கரங்கள் உதித்துள்ளன. பறவைகள், விலங்குகள், பூச்சிகள் போன்றவற்றின் வடிவத்தைத் தத்ரூபமாக உருவாக்குவதே இந்த ஜிசாய் கலை.

அந்த வகையில் விரும்பியதைச் செய்யலாம் என்பதும் ஜிசாய் என்ற வார்த்தையின் அர்த்தமாக காணப்படுவதால் இந்த இயந்திர கரங்களும் அதனையே நோக்கமாக கொண்டுள்ளன.

டோக்கியோ பல்கலைக் கழகத்தில் மசாஹிகோ இனாமியின் குழு இயந்திரக் கைகளை உருவாக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.

அத்துடன் ஜப்பானியர்களின் பாரம்பரிய பொம்மலாட்டம், யாசுனாரி காவாபாட்டா என்ற புகழ்பெற்ற ஜப்பானிய எழுத்தாளரின் திகில் கதை ஆகியவை கைகளை உருவாக்கத் தூண்டுதலாக அமைந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் தேடல் மற்றும் மீட்புப் பணிகளிலும் இந்த இயந்திர கரங்களை பயன்படுத்த முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (5)

## கனமழை …யிரிழப்பு



…தில் 5 பேர், ஷேக்புரா மாவட்டத்தில் 2 பேர் என 7 பேர் உட்பட மின்னல் தாக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் 7 பேர் வெள்ளத்தில் மூழ்கியும் மின்சாரம் தாக்கி 6 பேரும் உயிரிழந்துள்ளனர்.

அது மட்டுமன்றி, நரோவல், லாகூர், சினியோட் மற்றும் ஷேக்புரா போன்ற பல்வேறு மாவட்டங்களில் மின்கசிவு மற்றும் சுவர் இடிந்து விழுந்தமையால் 75 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் வரும் 30 ஆம் திகதி வரை நாட்டின் பல்வேறு மாகாணங்களில் கனமழை பெய்யக்கூடும் என பாகிஸ்தான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அது மட்டுமன்றி தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் அவதானமாக வாகனங்களை ஓட்டுமாறும் மற்றும் மின் கம்பங்களில் இருந்து விலகி இருக்குமாறும் மக்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு மாவட்டங்களின் நகர்ப்புறங்களில் தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மாகாண அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்துக்கு பிரதமர் ஷபாஸ் ஷெரீப் உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## ரஷ்யாவிற்குள் விழுந்து நொருங்கிய ஆளில்லா விமானங்கள்

(மொஸ்கோ)

அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானம் வெடிபொருட்களுடன் ரஷ்யாவிற்குள் விழுந்து நொருங்கியுள்ளதை காண்பிக்கும் படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

புதின் ஆதரவு சமூக ஊடகங்களில் இந்த படங்கள் வெளியாகியுள்ளன.

சைபக் என்ற அவுஸ்திரேலிய நிறுவனமொன்று தயாரித்துள்ள ஆளில்லா விமானமே ரஷ்யாவிற்குள் விழுந்து நொருங்கியுள்ளது.

குறிப்பிட்ட நிறுவனம் பலமாதங்களாக உக்ரைன் இராணுவத்திற்கு ஆளில்லா விமானங்களை வழங்கி வந்துள்ளது.

குறிப்பிட்ட விமானத்தின் இறக்கையில் வெடிக்கும் கருவிகள் காணப்படுகின்றன என டெலிகிராமில் ரஷ்யர் ஒருவர் தெரிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கான உத்தரவாத விலையை கோரி கிளி.விவசாயிகள் கவனயீர்ப்புப் போராட்டம்

(கண்டாவளை)

**கிளிநொச்சியில் நெல்லுக்கான உத்தரவாத விலையை கோரியும் நெல் கொள்வனவுக்கு நிதி ஒதுக்க கோரியும் விவசாயிகளால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**





கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் மகஜரும் கையளிக்கப் பட்டுள்ளது.

சிறுபோக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்கு இது வரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில் விவசாயிகளிடமிருந்து நிர்ணய விலையில் நெல்லை கொள்வ னவு செய்யக் கோரியும் நெல் கொள்வனவிற்கு நிதியை ஒதுக்க கோரியும் மாவட்ட விவசாயிகளால்கவனயீர்ப்பு போராட்டம்முன்னெடுக்கப்பட்டது கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தும் சபை முன் னிலையில் இருந்து பேரணியாக நகர்ந்து மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்ததுடன் மாவட்ட அரசாங்க அதிபர், ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சு உள்ளிட்டோருக்கான மகஜர்கள் மாவட்ட மேலதிக அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டு ள்ளது.

குறித்த போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு கோரிக்கை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315-316)

## உதயநகர்ப் பகுதியில் துப்பாக்கிச்சூடு காரில் பயணித்தவர் காயம்



(முறிகண்டி)

காரில் பயணித்த நபர் மீது இடியன் துப்பாக்கி மூலம் துப் பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டு ள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட உதயநகர் பகுதியில் நேற்றைய தினம் அதிகாலை 12.40 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கார் ஒன்றில் பயணித்த நபர் மீது மோட்டார் சைக்கிளில் பயணித்த இனம் தெரியாத நபர் களினால் இடியன் துப்பாக்கியால் சூடு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது காரில் பயணி த்த ஒருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருநகர் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய வசந்தகுமார் என்ற குடும்பத்தவரே சம்பவத்தில் காயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-100-316)



தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுக்கவும் தேவையான ஆலோசனைகளை வழங்கும் நோக்குடனும் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலகத்தில் பிரதேச மட்ட தொழிற்சந்தை மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் கண்டாவ்ளை பிரதேச செயலக மனிதவள உத்தியோகத்தர் ல.பகீரதி தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-யதுபாஸ்கரன்)


## UNIVERSITY OF JAFFNA – SRI LANKA

## INVITATION FOR BIDS (IFB)

### STILL PHOTOGRAPHY FOR 37th ANNUAL GENERAL CONVOCATION – 2023

1. The Chairman, Procurement Committee of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Still Photography to cover 37th Annual General Convocation - 2023 of the University of Jaffna which is scheduled to be held on 19th, 20th and 21st of July, 2023.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have the valid business registration with a minimum of five-year experience in relevant field.
3. Interested bidders may obtain further information from the Finance Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the Bidding Documents at the same address on any working day from 09.00hrs to 15.00 hrs. Contact number: 021 2210962
4. A complete set of bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Bursar (Supplies I) Finance Branch, University of Jaffna until 12th July 2023, from 09.00 hrs to 15.00 hrs upon payment of a non- refundable fee of Rupees two thousand (Rs.2000/-) to be deposited to the Peoples Bank, University of Jaffna with the Reference No **"970000060000276"** should be filled in the Account Number column in the Deposit Slip.
5. Bidding document and other details will be available in the University website www.jfn.ac.lk.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Assistant Bursar (Supplies I) Finance Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Finance Branch to reach on or before 10.00 am on 13th July, 2023. Bids will be opened soon after closing at 10.00 am on 13th July, 2023 at the Finance Branch in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 60 Days from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Bidding document.
   - In favour of "Vice Chancellor, Uersity of Jaffna"
   - For an amount of Rs. 15,000/=
   - Issued by one of the agencies (Banks) acceptable to the client.
9. Pre Bid meeting will be held on 06th July, 2023 at 10.00 am in the Finance Branch, University of Jaffna.

**Vice Chancellor,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna**

(c-6832)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித ஹஜ் பெருநாள் இன்று

புனித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதி படைத்த செல்வந்தர்களுக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. வசதி படைத்த செல்வந்தர்கள் அனைவரும் கண்டிப்பாக புனித ஹஜ்ஜை நிறைவேற்றியாக வேண்டும். சக்தியிருந்தும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றாமலிருப்பது பெரும் குற்றமாகும்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண் முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம் வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய ஸம் ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கின்றன.

ஹஜ்ஜுக்கான ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறைசாற்றும் சர்வதேச அளவிலான வருடாந்த மாநாடாக கணிக்கப்படுகிறது.



தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஹஜ் ஒன்றுகூடலில் மேலும் வலுப்பெறுகிறது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன் வாழ்ந்த ஜாஹிலிய்யா காலத்து மக்கள் கூட இவ்வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். இணை வைப்போடு மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்து வந்தது. இது ஒரு வழிபாடு என்பதை விடவும் அரேபிய தீபகற்ப மக்கள் ஒன்றுகூடும் வியாபார சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பின் இந்நிலை முற்றாக மாற்றப்பட்டு இணை வைப்பும் மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் முற்றாக அகற்றப்பட்டு வருடாந்தம் ஒன்றுகூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப் பெற்றது.

அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய்க் கொண்டு, எத்தனையோ காலங்களாக "இல்லையே தமக்கொரு பிள்ளை" என ஏங்கித் தவித்து இன்னல் பல கண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்விற்காக பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான, ஒப்பற்ற மனதையும் ஒரு மாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக் கூடாது. ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக் இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும்.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம், 'பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து புரிந்துணர்வுடன் உழ்ஹிய்யா கொடுப்போம், புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுவோம்.

**கலாபூஷணம் பரீட் இக்பால் -யாழ்ப்பாணம்**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2851

**கம்சா**

காலையில 8 மணி வரை தூங்குவது பிறகு டீ குடித்துவிட்டு ஒரு மணிநேரம் போனை நோண்ட வேண்டியது




பிறகு சுடுநீரில் ரவையைக் கொட்டி கிண்டி கிண்டி வைத்து விடுவது கேட்டால் குடும்பத் தலைவி என்று பீற்றிக் கொள்வது

**சியாந்த்**




**றேணுகா**




எங்களுக்கு எங்கம்மா காதலெல்லாம் வருது. நேரம் ஆனா சாப்பாட்டு ஞாபகம்தான் வருது

**நித்தியா**

நீங்க அடிச்ச கள்ள நோட்டு அப்பிடியே ஒறிஜினல் மாதிரி தானே இருக்கு பிறகு எப்படி மாட்டினீங்க



காந்திக்கு கண்ணாடி போட மறந்துட்டோம்

**வருன்**

எனக்கு எப்போலாம் மனசு கஷ்டமா இருக்கோ அப்போ எல்லாம் என் நண்பனுக்கு போன் பண்ணுவேன்.
உன் நண்பன் ஆறுதல் சொல்வானா?
ச்சே ச்சே தன் கஷ்டத்தை எல்லாம் சொல்வான் அதைக்கேட்டு என் மனசு ஆறுதல் அடையும்.



**தர்சன்**

சிகரெட்டு கிடைக்குமா ஐயா?
இல்லீங்க தம்பி அதெல்லாம் நான் விக்கிறதில்ல
நல்ல லாபம் கிடைக்குமே வாங்கி வச்சி விற்கலாமே.
தாகமா இருக்குன்னு விஷத்த குடிக்க முடியுமா தம்பி
பளார் பளார் பளார்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 216





"அப்படியானால் குடந்தை ஜோதிடர் வீட்டிலும் அரிசிலாற்றங்கரையிலும் நான் பார்த்த நாரீமணி தாங்கள் இல்லைதானே?" என்றான் வல்லவரையன்.

"ஆமாம், ஆமாம்! அந்த இரண்டு இடத்திலும் அவ்வளவு மரியாதைக் குறைவாகத் தங்களிடம் நடந்து கொண்டவளும் நானேதான். அந்த நாகரிகமில்லா மங்கையை மறுபடியும் இவ்வளவு சீக்கிரத்தில் சந்திப்போம் என்று எதிர்ப்பார்த்திருக்க மாட்டீர்!"

"மறுபடியும் சந்திப்பதாகச் சொல்வது பொருத்தமில்லை, தேவி!" "ஏன்?"

"விட்டுப் பிரிந்திருந்தால் அல்லவா மறுபடியும் சந்திப்பதாகச் சொல்லலாம்? தாங்கள் என் மனத்தை விட்டு ஒரு கணமும் அகலவில்லை."

"தொண்டை மண்டலத்தார் இவ்வளவு சமத்காரமாகப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"எல்லாப் பெருமையையும் சோழ நாட்டிற்கேதான் கொடுப்பீர்களாக்கும். வேறு நாடுகளுக்கு ஒரு பெருமையும் தர மாட்டீர்கள் போலிருக்கிறது."

"ஆம் என்னிடம் அந்தக் குற்றம் இருப்பது உண்மைதான். உமக்கு எங்கள் சோழ நாட்டைப் பிடிக்கவில்லையாக்கும்!"

"பிடிக்காமல் என்ன? நன்றாய்ப் பிடித்திருக்கிறது. ஆனால் இச்சோழ நாட்டில் இரண்டு பெரும் அபாயங்கள் இருக்கின்றன. அவற்றை எண்ணினாலே எனக்குப் பயமாயிருக்கிறது..!"

"சோழ நாட்டு வீரர்களின் வாளும் வேலும் அபாயகரமான ஆயுதங்கள் தான்! அயல் நாட்டவர்கள் இங்கே ஜாக்கிரதையாகவே வர வேண்டும். முக்கியமாக, ஒற்றர் வேலை செய்வதற்கென்று வருவோர்.."

"இளவரசி! அந்த இரு அபாயங்களை நான் குறிப்பிடவில்லை. வாளும் வேலும் என்னிடமும் இருக்கின்றன. அவற்றை உபயோகிப்பதற்கும் நான் நன்கு அறிவேன்."

"உமது வேலின் வன்மையைத்தான் அரிசிலாற்றங்கரையில் அன்று பார்த்தேனே? செத்துப் போன முதலையை உமது வேல் எத்தனை வேகமாய்த் தாக்கியது? ஒரே தாக்குதலில் உள்ளே அடைந்திருந்த பஞ்சையெல்லாம் வெளிக் கொண்டு வந்து விட்டதே?"

"அம்மணி! சோழ நாட்டு மாதரசிகள் செத்த முதலையைக் கண்டு பயந்து சாகும் வீர நாரீமணிகள் என்பதை நான் அறியேன். சோழ நாட்டு வீரர்கள் செத்த முதலையைத் தாக்கும் சுத்த வீரர்கள் என்றும் எனக்குத் தெரியாது. உயிருள்ள முதலையாக்கும் என்று எண்ணி வேலை எறிந்தேன். அது என் தவறும் அன்று என் வேலின் தவறும் அன்று!"

"அந்த அசட்டு முதலையின் தவறுதான்! வாணர் குலத்தில் பிறந்த வீர வந்தியத்தேவர் வேலோடு வரும் வரையில் காத்துக் கொண்டிராமல் முன்னதாகவே செத்துப் போய்விட்டதல்லவா? அதற்கு நன்றாய் வேணும் இந்த அவமானம்! வேறு எந்த இரு அபாயங்களைப் பற்றிச் சொன்னீர்?"

"இந்தச் சோழ நாட்டு நதிகளில் புது வெள்ளம் வரும்போது உண்டாகும் சுழல்கள் அபாயமானவை! அவற்றை ஒரு போதும் நம்பவே கூடாது. என்னைத் திண்டாடித் திணறும்படி செய்து விட்டன!"

"வெள்ளச் சூழலில் நீர் எப்படி அகப்பட்டுக் கொண்டீர்? தண்ணீரில் காலையே வைக்க மாட்டீர் என்றல்லவா உம்மைப் பார்த்தால் தோன்றுகிறது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நண்பர் கண்ட கனவு

சேர மன்னன், விஜயன் தனக்கு ஒரு புதிய அந்தரங்க ஆலோசகரை நியமித்துக் கொள்ள விரும்பினான். அது பற்றி அவன் தன் அமைச்சர் நீலகண்டரிடம் ஆலோசிக்க வந்தான்.



"அரசே ! நம் நாட்டில் அரசியல், பொருளியல், நீதித்துறை, ஆட்சித்துறை எனப் பல துறைகளில் நன்கு படித்தவர்கள் இருக்கின்றனர். இப் பதவிக்கு அறிவிப்பு செய்தால் அவர்களில் பலர் தங்களைக் காணவருவர். அவர்களுக்கு தேர்வு நடத்தி நன்கு படித்த ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம் என்றார் அமைச்சர் நீலகண்டர்.

நாடெங்கிலும் பறைசாற்று வித்து அந்தரங்க ஆலோசகர் பதவிக்கு தகுதி உடையவர்கள் குறிப்பிட்ட ஒரு நாளில் தேர்வுக்கு வரலாம் என அறிவித்தார். குறிப்பிட்ட நாளில் பல இளைஞர்கள் தேர்வுக்கு வந்தனர்.

அவர்களுக்கு நடந்த தேர்வில் இரு இளைஞர்கள் முன்னதாக வந்தனர். ஆனால், இருவரும் எல்லா விஷயத்திலும் சமமாக இருந்ததால் அவர்களில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று முடிவு செய்ய அமைச்சரை அணுகினார் மன்னர். "இப் பதவிக்கு வெறும் புத்தகப் படிப்பு இருந்தால் மட்டும் போதாது. சிக்கலான பிரச்சினைகளைச் சமாளித்து நல்லமுடிவு காணத் திறமை பெற்றவராக இருக்க வேண்டும். அவர்கள் இருவருக்கு மட்டும் பரீட்சை வைத்து அதில் தேர்ந்தவனைப் பதவிக்கு நியமியுங்கள்," என்றார்.

மறுநாள் அமைச்சர் இருவரையும் அழைத்து, "இன்று காலை என் நண்பரின் உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டது. அவரது நிலை பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்," எனக் கூறி விவரிக்கலானார். "என் நண்பர் இன்று காலை என்னிடம் கூறியதை அப்படியே கூறுகிறேன். என் நண்பர் வயதானவர் இதய நோயாளி. ஒரு நாள் இரவு அவர் பயங்கரமான கனவு ஒன்றைக் கண்டார். அந்தக் கனவில் அவர் ஒரு அடர்ந்த காட்டிற்குள் வழி தவறிப் போய் விட்டா டார்.

அவர் ஒரு இடத்தில் நான்கு பாதைகள் சேர்வதைக் கண்டார். "மங்கிய இரவில் நட்சத்திர ஒளியில் அவர் அவற்றில் ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்து நடந்து சென்றார். அங்கு சில சிங்கங்கள் திரிந்து கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று அவரை நோக்கிப் பாய்ந்து வந்தது. நண்பர் பயந்து வந்த வழியே ஓடி மறுபடியும் நான்கு பாதைகள் சேரும் இடத்தை அடைந்தார்.

இரண்டாவது பாதையில் பயமில்லாது நடந்து சென்றார். கொஞ்ச தூரத்தில் ஏதோ வெளிச்சம் இருந்தது கண்டு அங்கு சென்றார்.

அங்கு பல பாம்புப் புற்றுகள் இருப்பதையும் அவற்றின் மேல் பல பாம்புகள் படமெடுத்துத் ஆடுவதையும் கண்டார். அவற்றில் ஒன்று ஐந்து தலை நாகம். அவரைக் கண்ட ஐந்து தலைப் பாம்பு சீறவே அவர் பயந்து வந்த வழியே திரும்பி ஓடி மீண்டும் நான்கு பாதைகள் சேரும் இடத்தை அடைந்தார்.

பிறகு அவர் மூன்றாவது பாதையில் நடந்து செல்லலானார். கொஞ்ச தூரம் சென்றதும் அது ஒரு மலை அடி வாரத்தில் போய் முடிந்தது. அங்கு பல மனித எலும்பு கூடுகள் இருப்பதைக் கண்டு மலைத்து நின்றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிவும், திருத்திக்கொள்ள விரும்பும் விருப்பமும் தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள். – லெனின்

வலம்புரி

TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சூழ்நிலையை சாதகமாக்க தமிழ்த் தரப்புகள் தயாரா?

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் காரணமாக நாடு தன்னை மீள்வாசிப்புக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

அதாவது நாட்டின் பொருளாதார நெருக்கடி என்பது கடந்த கால ஆட்சியாளர்களின் தவறான செயற்பாடுகளால் ஏற்பட்டதென்பது நிரூபணமாகியுள்ளது.

எனவே கடந்த காலத் தவறுகள் எவை என்று நேர்முகத்துடன் பரிசீலிக்கப்படுமாயின், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதை விடுத்து உள்நாட்டுப் போரை நடத்தியமையே நாட்டின் பொருளாதாரப் பெருமந்தத்துக்கு மூலகாரணம் என அறிய முடியும்.

ஆக, உள்நாட்டுப் போரை நடத்தி நாட்டின் செல்வத்தை அழித்தது மாத்திரமன்றி, போர் வெற்றியைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட ஆட்சியாளர்கள் நாட்டை சூறையாடினர்.

இதன் விளைவாக, இன்று இலங்கை சர்வதேச நாடுகளிடம் கையேந்தி நிற்கிறது.

இந்த நிலையில் முதலில் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணுங்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்ற கருத்தை உலக நாடுகளும் சர்வதேச பொது அமைப்புகளும் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கி வருகின்றன.

ஆக, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் – தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்களுக்கு உத்தரவாதம் வழங்காமல், உலக நாடுகளிடம் எந்த உதவியையும் கேட்க முடியாதெனும் சூழமைவு ஏற்பட்டுவிட்டது.

இதன் காரணமாகவே எந்த நாட்டுக்குச் சென்றாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க; இனப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்ற உறுதிமொழியை வழங்கி வருகிறார்.

இதுதவிர, உள்நாட்டிலும் அவரின் உச்சாடனம், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும், மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்பதாக உள்ளது.

ஆக, வெளிநாடுகளின் அழுத்தம் மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி சார் அமைப்புகளின் நிபந்தனைகள் என்பவை காரணமாக விரும்பியோ விரும்பாமலோ இனப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்து வெளிநாடுகளை ஆசுவாசப்படுத்த வேண்டிய தேவை இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

அதாவது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இனி இலங்கையால் உலக அரங்கில் முகம் கொடுக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இவ்வாறு ஏற்பட்டுள்ள சூழமைவை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நம் தமிழ்த் தரப்புகள் தயாரா என்பதுதான் இப்போது இருக்கக்கூடிய எழுவினா.

ஆம், இயற்கை நமக்கு அளித்துள்ள இந்த சாதகமான சூழமைவைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்வது தமிழர் தம் கடமை.

# அஸ்வெசும திட்ட இறுதிப்பட்டியல் இதுவரை தயாரிக்கப்படவில்லை

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

(கொழும்பு)

அஸ்வெசும திட்டத்திற்கான இறுதிப் பட்டியல் இதுவரை தயாரிக்கப்படவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டார்.

இந்த திட்டத்திற்காக 37 இலட்சம் பேர் விண்ணப்பித்த போதிலும், இல்லங்கள் தோறும் சென்று ஆராய்ந்த போது அவற்றில் 05 இல்ட்சம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தற்போது 32 இலட்சம் விண்ணப்பங்கள் மாத்திரமே மீதமுள்ளதாகக் குறிப்பிட்ட நிதி இராஜாங்க அமைச்சர் திட்டத்திற்கான இறுதிப் பட்டியல் இதுவரை தயாரிக்கப்படவில்லை என குறிப்பிட்டார்.

உரியவர்களுக்கு பலன் கிடைக்கும் வகையில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

# மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் மோசடி

## எதிர்க் கட்சித் தலைவர் விசனம்

(கொழும்பு)

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில்இடம்பெறும்மோசடிகள் தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் செயலாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அரச ஔடதவியலாளர் சங்க பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

தேசிய மருந்துகள் அதிகாரசபை வினைத்திறனுடன் செயற்பட வேண்டும். இது தொடர்பான கண்காணிப்புக்களை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (4-7)

# இலங்கை-ஜோர்ஜியா புரிந்துணர்வு ஒப்பந்தம்

(கொழும்பு)

சுற்றுலாத்துறை ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கைக்கும் ஜோர்ஜியாவுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கும் ஜோர்ஜியாவின் தேசிய சுற்றுலா நிர்வாக நிறுவனத்திற்கும் இடையே இந்த உடன்படிக்கை கையொப்பமிடப்படவுள்ளது.

குறித்த உடன் படிக்கையை கையொப்பமிடும் நோக்கில் சுற்றுலாத்துறை அமைச்சு முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# கிளிநொச்சிக்கு சுகாதார பணிப்பாளர் நியமனம்

(கிளிநொச்சி)

கடந்த சில மாதங்களாக வெற்றிடமாக காணப்பட்ட கிளிநொச்சி பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பதவிக்கு புதிதாக சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட மருத்துவ கலாநிதி சேரலாதன் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் முன்னர் அக்கராயன் வைத்தியசாலை பொறுப்பு வைத்தியராகவும்,கிளிநொச்சி மாவட்டபதில் திட்டமிடல் வைத்திய அதிகாரியாகவும் நீண்டகாலம் பணியாற்றியவராவார். (4-7)

# கோயிலுக்குச் சென்ற மூதாட்டியின் சங்கிலி அறுப்பு

(கிளிநொச்சி)

வயோதிபப் பெண் ஒருவர் கோயிலில் வழிபாட்டில் ஈடுபட்டு கொண்டிருந்த போது அவரது நகை திருடப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று கிளிநொச்சியில் பதிவாகியுள்ளது.

கிளிநொச்சி மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு பூஜைகளில் பங்கேற்க சென்ற 70 வயது மூதாட்டியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி திருடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வயோதிபப் பெண் கோவிலில் வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பின் தொடர்ந்து வந்த திருடன் சங்கிலியை அறுத்துச் சென்றதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-7)

# சர்வதேச நாணய நிதிய பிணை எடுப்பு இந்தியாவினால் மட்டுமே சாத்தியமானது

## மிலிந்த மொரகொட தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்பு இந்தியாவின் ஆதரவினால் மட்டுமே சாத்தியமானது என உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகக்குழு ஒன்றுடனான உரையாடல் ஒன்றின்போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆண்டு நெருக்கடியின் போது 4 பில்லியன் டொலர்களை வழங்கி இந்தியா இலங்கைக்கு ஆதரவளித்தது.

இந்தியா அந்த ஆதரவை வழங்கவில்லை என்றால் இலங்கை மிகவும் கடினமான சூழ்நிலைக்கு சென்றிருக்கும் என்றும் மொரகொட தெரிவித்துள்ளார்.

இதன்போது சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியை இலங்கை பெற்றமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், இதில் எந்த கேள்வியும் இல்லை சர்வதேச நாணய நிதிய பிணை எடுப்பு இந்தியாவினால் மட்டுமே சாத்தியமானது எனக் கூறினார்.

இதேவேளை அடுத்த மாதம் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணம் குறித்து அவர் சூசகமாக குறிப்பிட்டபோதும், விபரங்களை வெளியிடவில்லை.

சீனாவுடனான இலங்கையின் உறவுகள் மற்றும் கடந்த ஆண்டு நெருக்கடிக்கு சிலர் குற்றம்சாட்டிய "கடன் பொறி" குறித்தும் மொரகொட கருத்துரைத்தார். இலங்கையின் "கடன் பொறி என்பது, இலங்கையின் தவறான கொள்கைகளால் ஏற்பட்டது என்றும் அதற்கு வேறு எவரும் காரணம் அல்ல என்றும் மொரகொட மேலும் குறிப்பிட்டார். (4-7)

# ஜனாதிபதி சட்டத்தரணி சிற்றம்பலம் காலமானார்

வவுனியாவின் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம் நேற்று சுகவீனம் காரணமாக காலமானார்.

வடமராச்சி கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் முன்னாள் வவுனியா மாவட்ட சபை தலைவராகவும் பொது அமைப்புக்களின் தலைவராகவும் பதவி வகித்த நிலையில் வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தில் நீண்டகாலமாக தலைவராக இருந்து வவுனியா மாவட்டத்திற்கு பல்வேறு உதவிகளை புரிந்தவராவார்.

மேலும் பண்டார வன்னியனின் சிலையை வவுனியா நகரில் நிறுவுவதற்கு அன்றைய வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரத்துடன் இணைந்து செயற்பட்ட இவர் கொலை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் வவுனியா மண்ணில் இருந்து சட்டத்துறையில் சிறப்பாக செயற்பட்டவராவார்.

பல இளம் சட்டத்தரணிகளுக்கும் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் வழிகாட்டியாக இருந்த மு. சிற்றம்பலம் அவர்கள் யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. (4-7.60.250)

### அதிபர் சேவை தரம் மூன்றின்

# புதிய நியமனங்களுக்கு தடைவிதித்த நீதிமன்று

இலங்கைஅதிபர்சேவையின் மூன்றாம் தரத்திற்கு புதிய நியமனங்கள் வழங்குவதை தடுத்து உயர் நீதிமன்றம் நேற்று தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இது தொடர்பான மனு சுமன சந்ர தேரரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

04

கலாநிதி க.தவலிங்கம்
ஒய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு நாணயங்கள் அரசியல் மற்றும் வணிக உறவுகளை மதிப்பிட உதவுகின்றதாகக் கருத முடியும்.

THE COINS OF ANCIENT JAFFNA

2016 ஆம் ஆண்டில் டாக்டர் சிவா தியாகராஜா் அவர்களால் "THE COINS OF ANCIENT JAFFNA" என்னும் நூல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருந்தது. அதில் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இதில் உள்ளவை பற்றி இங்கு அலசப்படவில்லை.


**கந்தரோடை பற்றி.....**

இலங்கையின் வடபகுதியில் பொதுவாக கந்தரோடையிலேயே பண்டைய தமிழர் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று மேற்குறிப்பிட்ட நூல்களில் கூறப்பட்டுள்ளன. கந்தரோடை என்று அழைக்கப்படும் ஊர், 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுத் தன்மை கொண்டுள்ளது. அதாவது கிறிஸ்துவுக்கு முன் 50 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றை உடையது என்று ஆய்வாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். "யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தொல்லியல் களங்களுள் மிகவும் பழைமை வாய்ந்தது மட்டும் இன்றி மிக பிரசித்தி பெற்றதும் இந்த கந்தரோடை தொல்லியல் களம் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் 3000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கருங்கல் அம்மி ஒன்று கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இது ஒரு பெருநகரமாக இருந்தது என்றும் வியாபார முக்கிய நிலைய மென்ற வகையில் சர்வதேச நாமத்தை கொண்டிருந்தது என்று பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி, பௌத்த சமயம் இங்கு மலர முன்னர் ஆரிய பண்பாடு நிலவியதாகவும் கூறப்படுகின்றது. ரோமாபுரி, சீனா, சேர, சோழ, பாண்டிய, பல்லவ, சிங்கள அரசு கந்தரோடையுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தமைக்கான சான்றுகளையும் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.

இவ்வாறு தமிழ் நாணய்ங்கள் பற்றிய பல வரலாறுகள் இருக்கின்றன. ஆனால் இக்கட்டுரை முக்கியமாக இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தில் இலங்கை நாணயங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ள விடயங்களை ஆதாரமாகக் கொண்டே எழுதப்படுகிறது. மேலும் இலங்கையின் பண்டைய நாணயங்கள் கி.மு மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து புராண அடையாளமிடப்பட்ட நாணயங்களுடன் தொடங்குகின்றது.



கிமு 200 ஆம் ஆண்டளவில் புழக்கத்தில் இருந்த உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நாகா நாணயம் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நாணயத்தின் முகப்பில் இரட்டைப் பாம்புகளின் சின்னமும் பின்பக்கத்தில் தமிழ் பிராமி எழுத்துக்களும் உள்ளன.

நன்றி பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம்

இலங்கை ஆரம்ப காலம் தொட்டே நீண்டதொரு வரலாறு கொண்ட நாடென்பது நாம் அறிந்ததே. அதில் கலாசாரம் மற்றும் பொருளாதார வரலாற்றிலும் இலங்கைக்கு முக்கிய இடமுண்டு. கிழக்கு முதல் மேற்கு வரை வியாபித்திருக்கும் கடலுக்கு மத்தியில் இலங்கை அமைந்துள்ளதால் பண்டைய் காலங்களில் கடல் வழி மற்றும் தரை வழியினூடாக வர்த்தகம் செய்வதற்கும் ஏதுவான நாடாக இருந்துள்ளதென கல்வெட்டுக்கள், வம்சக்கதைகள், பண்டைய கடித ஆவணங்கள் மற்றும் ஏனைய தொல்பொருளியல் சான்றுகளின் ஊடாக அறிந்து கொள்ளலாம். இச் சான்றுகளில் நாணயங்கள் மற்றும் கல்வெட்டுக்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. அந்தவகையில் இலங்கையின் வெவ்வேறு காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட நாணயக்குத்திகள் இந்நாட்டின் வரலாற்றினை தெரிந்து கொள்வதற்கு ஏதுவாய் அமைகின்றன.

**இலங்கையின் நாணயப் பயன்பாட்டின் காலப் பகுதிகள்**

இலங்கையின் நாணயப் பயன்பாட்டினை பின்வரும் காலப்பகுதிகளாகப் பிரிக்க முடியும் என்று இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தில் கூறப்பட்டுள்ளது.

அவை

1. அநுராதபுர யுகம்
2. பொலநறுவை தொடக்கம் கோட்டை வரையான யுகம்
3. கண்டி யுகம்
4. காலணித்துவ யுகம்
5. இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டதிலிருந்து சுதந்திரத்திற்குப் பின்னரான காலம்

இத் தொடரில் அநுராதபுர யுகம், பொலநறுவை தொடக்கம் கோட்டை வரையான யுகம் மற்றும் கண்டி யுக நாணயக் குத்திகள் பற்றி மட்டுமே ஆராயப்படுகிறது. அடுத்த தொடரில் காலணித்துவ யுக நாணயக் குத்திகள் பற்றியும் மூன்றாவது தொடரில் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயக் குத்திகள் பற்றியும் ஆராயப்படும்.

**வரலாற்றுக்கு முற்பட்ட காலம்**

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது எழுத்து மூல வரலாறு ஆரம்பமாவதற்கு முற்பட்ட காலமாகும். இந்நாட்டில் விஜயனின் வருகைக்கு முற்பட்ட காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலமாகும். இலங்கையில் ஆவணப்படுத்தப்பட்ட வரலாறு காணப்படுவது கி.மு 6 ஆம் நூற்றாண்டு அளவிலாகும். இருப்பினும் அதற்கு முன்பிருந்தே இலங்கையில் மக்கள் வாழ்ந்தார்கள் என்பது தொல்பொருள் சான்றுகளிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. ஆவணப்படுத்தப்பட்ட ஆதாரங்கள் இன்றி தொல்பொருள் சான்றுகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட வரலாற்றுக்குரிய காலமே வரலாற்றுக்கு முற்பட்டகாலம் என அழைக்கப்படுகின்றது.

இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய மக்கள் வாழ்ந்ததாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பல இடங்கள் காணப்படுகின்றன. இரத்தினபுரிப் பிரதேசத்தின் வண்டல் மண்படைகளுக்கிடையில் காணப்பட்ட பளிங்குக்கல், செம்மஞ்சள் கற்களால் தயாரிக்கப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்கு உரித்தான கல்லாயுதங்களும் வானர மனிதனுடையது எனக் கருதக் கூடிய பற்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவை மிகப் பண்டைய வரலாற்றுக்கு முற்பட்ட மக்களுக்குச் சொந்தமானவையெனக் கருத முடியும். இவற்றை பழைய கற்காலத்துக்குரிய பொருட்கள் எனக் குறிப்பிடலாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்கு உரிய தொல்பொருட்கள் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பலத்திங்கள, பாகியன் கல குகை, குருவிட்டைக்கு அருகிலுள்ள பட்ட தொம்பலன குகை, கேகாலைக்கு அருகில் உள்ள அத்தன கொடையில் அமைந்துள்ள அலுனெ, பெல்லன் பதிபெல்லச, கித்துல்கல பெலிபெல்லஸ்ஸ ஆகிய இடங்கள் இவற்றுள் சிலவாகும். வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித எச்சங்கள் பாகியன் கல, பட்ட தொம்பலன குகை, பெல்லன் பதி பெல்லச ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நில்கல, பெலிகல்கே இராவணன் எல்ல ஆகிய குகைகளில் மனிதனுடைய எலும்புத் துண்டுகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் வரலாறு என்பது இரண்டு இனங்களுக்கிடையிலான தொடர் போராட்டமாகவே இன்று வரை தொடர்ந்து வருகின்றது. குடிசார் வரலாற்றுப் புவியியல் அடிப்படையில் திராவிட இனத்தின் பாரம்பரியத் தீவாக விளங்கிய இலங்கை, தனது ஒரு பெரும் பகுதியில் புதியதொரு இனத்தினைச் சேர்த்துக் கொண்ட சம்பவம் கி.மு.483 ஆம் ஆண்டு விஜயனின் வருகையோடு நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது.

**விஜயன் பிறப்பு**

வடஇந்தியாவில் உள்ள வங்காளம், ஒரிசா ஆகிய பகுதிகள் முந்தைய காலத்தில் லாலாதேசம் என்று அழைக்கப்பட்டது. இந்த ராஜ்ஜியத்தை ஆண்ட மன்னன் சிங்கபாகு, சிங்கத்துக்கும் ஒரு ராஜகுமாரிக்கும் பிறந்தவர். சிங்கபாகு, சிகாசிவாலி என்ற பெண்ணை மணந்து அவளை பட்டத்து ராணி ஆக்குகிறார். இவர்களுக்கு 16 முறை இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. இந்தக் குழந்தைகளில் மூத்தவன் விஜயன். அவனை பட்டத்து இளவரசனாக சிங்கபாகு நியமிக்கிறார்.

**இலங்கைக்கு வந்த விஜயன்**

விஜயன் மிகவும் கொடூரமானவன். அவன் செய்த அட்டூழியங்கள் பற்றி, மன்னனிடம் மக்கள் முறையிடுகிறார்கள். மகனைத் திருத்த முயற்சிக்கிறார் சிங்கபாகு. ஆனால் விஜயன் திருந்தவில்லை. நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு, மக்களைத் துன்புறுத்துகிறான். அவன் அட்டூழியங்கள் எல்லை மீறிப் போனதால் மன்னனிடம் மக்கள் மீண்டும் முறையிடுகிறார்கள். "விஜயனுக்கு மரண தண்டனை விதியுங்கள்" என்று வற்புறுத்துகிறார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிந்த நிலையில்...

இதன்போது குறித்த இளைஞன் வீட்டின் பின்புறத்தில் எரிந்த நிலையில் சடலமாக கிடந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த அயந்தன் என்ற 23 வயது இளைஞனே மரணமடைந்துள்ளார். (4-7,250)

## 2 ஆயிரம்...

தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார். (4-7)

## உள்ளூராட்சி...

ளூராட்சி மன்றங்களின் பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான சட்டமூலத்திற்கான திருத்தச் சட்டமாக இந்த நகல் சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களை இந்தச் சட்டமூலம் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு மீண்டும் கூட்டுவதற்கான அதிகாரம் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சருக்கு கிடைக்கின்றது.

தேர்தல் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த தேர்தலை நடத்த முடியாத ஏதேனும் சூழல் ஏற்பட்டால் அதற்குப் பதிலாக குறிப்பிட்ட ஒரு காலம் வரை கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் கூட்டுவதற்கான அதிகாரம் இந்தச் சட்டமூலம் ஊடாக அமைச்சருக்கு வழங்கப்படுகின்றது.

இதற்கான விசேட வர்த்தமானி ஒன்று தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் கூட்டுவதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரமளிக்கும் வகையில் 3 திருத்தச் சட்டமூலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவின் தனிநபர் யோசனையாக இந்த 3 திருத்தச் சட்டமூலங்களும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

பிரதேச சபைகள் திருத்தச் சட்டம், நகர சபைகள் கட்டளை திருத்தச் சட்டம், மாநகர சபைகள் திருத்தச் சட்டம் ஆகிய சட்டங்களின் சரத்துகள் சில இந்த சட்டமூலத்தின் மூலம் திருத்தப்படவுள்ளன. (4-7)

## உள்நாட்டுக்...

புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதனைத் தொடர்ந்து உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், குறித்த உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டம் நாளை வெள்ளிக்கிழமை பாராளுமன்ற பொது நிதி குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அத்துடன், அன்றைய தினமே சபாநாயகர்மகிந்தயாப்பா அபேவர்தன தலைமையில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டமும் நடைபெறவுள்ளது. (4-7)

## மறுசீரமைக்கா...

என்றாலும்நாடு மீண்டும்வரிசையுகத்துக்கு சென்று அரசியல் குழப்பங்கள் ஏற்படுவதை விரும்புபவர்களே பொய் பிரசாரங்களை மேற்கொண்டு மக்களை குழப்பி வருகின்றனர் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளருமான சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பாக எதிர்க்கட்சிகள் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு மக்களை குழப்பி வருகின்றனர். கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டால் நாடு அராஜக நிலைக்கு செல்லும் எனவும் வங்கி கட்டமைப்பு வீழ்ச்சியடையும் என்றும் தெரிவித்து வருகின்றனர். அதேபோல், வங்கிகளுடன் கலந்துரையாடாமல் அரசாங்கம் தன்னிச்சையாக செயற்படுவதாகவும் தெரிவித்து வருகின்றனர்.

இவர்கள் தெரிவிப்பதுபோல் அரசாங்கம் அவ்வாறு செயற்படவில்லை. செயற்படவும் முடியாது. அதேநேரம் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் கடன் மறுசீரமைப்பு முக்கியமாகும். எதிர்க்கட்சிகள் தெரிவிப்பதுபோல் கடன் மறுசீரமைப்பு செய்யாவிட்டால் நாடு மீண்டும் வரிசையுகத்துக்கு செல்லும், மக்கள் வீதிக்கிறங்கி போராடும் நிலை ஏற்படும்.

அந்த நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கே அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால் நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு குழப்ப நிலையை எதிர்பார்ப்பவர்களே கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனத் தெரிவித்தார். (4-7)

## ரூபாயின்...

களில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில், மக்கள் வங்கியில் அமெரிக்க டொலரின் கொள்வனவு பெறுமதி 299.74 ரூபாயிலிருந்து 300.71 ரூபாயாக அதிகரித்துள்ளது. விற்பனை பெறுமதியும் 317.47 ரூபாயிலிருந்து 318.51 ரூபாயாக அதிகரித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியில் அமெரிக்க டொலரின் கொள்வனவு பெறுமதி 297.68 ரூபாயிலிருந்து 299.66 ரூபாயாக அதிகரித்துள்ளது. எனினும் விற்பனை பெறுமதி மாற்றமின்றி 316 ரூபாயாக உள்ளது.

சம்பத் வங்கியில் அமெரிக்க டொலரின் கொள்வனவுமற்றும் விற்பனை பெறுமதி மாற்றமின்றி முறையே ரூ. 300, ரூ. 315 ஆகவும் பதிவாகியுள்ளது. (4-7)

## 1.2 பில்...

அமைச்சர் அலி சப்ரி சீனாவின் EXIM வங்கியின் தலைவர் Wu Fulin-ஐ சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடியதாகவும், இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்கு சீனா தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என இதன்போது சீனாவின் EXIM வங்கியின் தலைவர் கூறியதாகவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சைனா ஹார்பர் பொறியியல் ஒத்துழைப்பு நிறுவனத்தின் (China Harbour Engineering Corporation - CHEC) தலைவர் மற்றும் அந்த நிறுவனத்தின் உயர்மட்ட முகாமைத்துவ அதிகாரிகளையும் அமைச்சர் சந்தித்துள்ளார்.

துறைமுக நகரத்தில் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்கள் பலவற்றுக்கு புதிய முதலீடுகளை மேற்கொள்ள மேலும் 1.2 பில்லியன் டொலரை வழங்க அவர்கள் இணக்கம் தெரிவித்ததாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சீனாவின் Sinopec நிறுவனத்தின் தலைவரையும் அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

Sinopec நிறுவனத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான முதலீடு மற்றும் பங்களிப்பு தொடர்பில் இதன்போது கலந்துரையாடியதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (4-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 28/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1614
வெற்றி இலக்கங்கள்
தனுசு 3 8 2 5 6 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1189
C 20 21 69 77
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.28
சீட்டிழுப்பு இலக்கம் 3401
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Z 08 31 37 77
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1507
H 12 11 21 35 52

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.28
சீட்டிழுப்பு இலக்கம் 468
மீனம் 05 15 42 55 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/28
சீட்டிழுப்பு இலக்கம் 5159
P 7 6 6 9 7 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2133
சீட்டிழுப்பு திகதி 2023.06.28
நிறம் சிவப்பு
தினம் புதன்கிழமை
A 06 08 44 52
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,837,140/-
DLB

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.28
வெற்றி வாரம்: 4294
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,266,757.20
வெற்றி இலக்கங்கள்
06 09 14 67 X
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,409,637.80
திகதி 2023-06-28
வெற்றி வாரம் 3845
வெற்றி இலக்கங்கள் 16 46 51 52
மீனம்
வர்ணம் பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,621,840/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 31 06 13 36 48
1309
2023.06.28
புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 341,607,924.20
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB

ஜயோதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.28
வெற்றி வாரம்: 1934
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 44,479,486.40
வெற்றி இலக்கங்கள் 09 30 42 61 Y
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 1959
சீட்டிழுப்பு திகதி: 2023.06.28
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 54,397,224.60
03 26 29 71 E
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும்,

01. சிட்டை எழுதுநர்
02. வரவேற்பாளர்
03. பைக்கிங் செய்பவர்

(16128)

**077 748 8093, 074 073 4830**


## சக்தி கலாசார மேம்பாட்டு மன்ற ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சக்தி கலாசாரா மேம்பாட்டு மன்றத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று காலை 8.00 மணிக்கு யாழ். நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் தலைவர் திருமதி சனுஜா அருண்ராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உள சமூக சீராளன் கலாபூஷணம் செ.யோசெப் பாலா கலந்துகொள்ளவுள்ளார். (4.7.5)

## விபத்து; ஒருவர் பலி

மஹியங்கனை - பதியத்தலாவை வீதியிலுள்ள பாலமொன்றுக்கு அருகில் பாரவூர்தி மோதி 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த அவர் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மஹஓய பகுதியை சேர்ந்த 25 வயதுடைய பாரவூர்தி சாரதியை மஹியங்கனை பொலிஸார் கைது செய்துள்ளனர். (4-7)


## காணி விற்பனைக்கு

**கோண்டாவில், டிப்போ கிழக்கு பகுதி மதிலில் இருந்து இரண்டாவது காணி**

- 2 பரப்பு
- சுற்று மதில், குழாய்க்கிணறு மற்றும் சிறிய வீடு கொண்ட காணி விற்பனைக்குண்டு.

(16113)

**076 551 7346, 077 917 7311**

## TECHNO WORLD
### தொழில்நுட்பக் கல்லூரி

(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)

**புதிய பிரிவு A/L 2025**

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, விவசாயம், புவியியல், கணிதம், சித்திரம்

(C-6831)

திகதி: 01.07.2023 (சனி) ஆரம்ப நேரம்: 8.30 am

தொடர்புகளுக்கு: **077 017 5346**



**இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்**

**கோயிலில் பணியாற்றக் கூடிய பணியாளர் தேவை**

இந்துக்களாகவும் ஆசாரசீலராகவும் சமயப் பணிகளில் ஆர்வம் உள்ளவர்களாகவும் கணினி அறிவுடையவராகவும் உள்ள ஆண் பணியாளர் தேவை. தங்களின் தகைமைச் சான்றிதழ், குணநல சான்றிதழ் என்பவற்றுடன் நேரில் சமூகமளிக்கவும்.

செயலாளர்

(C-6836)

**077 744 3735**

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் Lankan Tile Show Room இற்கு கீழ் குறிப்பிட்ட பணியாளர்கள் தேவை

- Show Room மனேஜர் சிங்களம்/ ஆங்கிலம் தெரிந்தவர் ஆண்
- விற்பனைப் பிரதிநிதி சீமெந்து ஆண்
- க/கு பதிவாளர் ஆண்/பெண்
- பணியாளர்கள்

தேவை. தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமூகமளிக்கவும்.

குறிப்பு : 5 km சுற்றுளவு தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

(C-6834)

**குரு காட்வெயார்**

இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

**077 743 5265**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16033)

T.P: **077 544 8503**




## அறிவித்தல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை 30.06.2023 வெள்ளிக்கிழமை நடைபெறாது என்பதனை அறியத்தருகிறோம்.

**பொதுக்கூட்டத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

(C-6837)

**ஆலய பரிபாலன சபை**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16126)

**076 826 0354, 076 057 0354**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




(C-6838)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

V2 TRAVELS

**0777-068-777**

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்**

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

(C-6838)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

**0777-068-777**

v2vacancies@gmail.com

## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

**கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.**

**பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடன் பட்டின் வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மாஸ் வகைகள், குடை வகைகள், கவரின் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.**

உரிமையாளர் :

தே. கலைத்தாசன் (கரன்)

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி) யாழ்ப்பாணம்.

**021 315 5900**

(16126)

## வேலை ஆட்கள் தேவை

பகுதி நேரமாக வேலை செய்ய ஆண்/ பெண் வேலையாட்கள் தேவை.

(16127)

**077 713 4777**

## விற்பனைக்கு

ஒரு கைப்பாவனையில் உள்ள TATA(207) Aluminum Body Tata Batta EX2 5 கியர் உடன் விற்பனைக்கு உண்டு. Km குறைய ஓடியது. 2016 Model

தொடர்புகளுக்கு

(16127)

**077 713 0839**

- புங்குடுதீவில் காணி தேவை
- MAHENDRA 4X4 DIESEL JEEP FOR SALE

(16114)

**077 729 5428**

## குத்தகைக்கு தேவை

வான்/கார் குத்தகைக்கு தனியார் கம்பனிக்கு தேவை. தகுந்த பெறுமதி வழங்கப்படும்.

(16116)

**077 971 5379**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தால் இல.191, ... மற்றும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org